விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, ஆனி 22 உ. ஞாயிறு (6-7-69) ந. ஆகிர் 2௦ புத்தகம் 23 இதழ் 36




"குரு மகாசன்னிதானத்தின் அருள்வாக்குப்படி

# ஜீ. ஜீ. அரசியலைவிட்டு வெளியேற வேண்டும்!

## இதனால் அரசியல் புனிதமடையும்! தமிழர் ஒற்றுமையும் உறுதிப்படும்!!

## சுவாமிகள் வாக்கு பொய்க்காது; வெளியேருவிட்டால் வெளியேற்றப்படுவார்!"

### பழம்பெரும் அரசியற் பிரமுகர் கருத்து!

"குரு மகாசன்னிதானம் தவத்திரு. சோமசுந்தர சுவாமிகளின் அருள் வாக்குப்படி திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசியலைவிட்டு உடனடியாக வெளியேறுவாரானால், தமிழினத்துக்கு அவர் செய்யும் பெரு நன்மையாக அது இருக்கும். இதனால் தமிழ் பேசும் மக்களின் அரசியல் புனிதமடையும். தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்கும் நல்வாழ்வுக்கும் இதுவே ஒரே வழியாகும்.

"குரு மகா சன்னிதானத்தின் வாக்கு ஒருபோதும் பொய்க்காது. அரசியலில் திரு. பொன்னம்பலத்தின் 'சேவை' ஈழத் தமிழினத்துக்கு இனித் தேவையில்லை என்பதைத் திருவருட் கண் கொண்டுணர்ந்தே சோமசுந்தரப் பரமாசாரிய சுவாமிகள் அவரை அரசியலிலிருந்து வெளியேறி தம்முடன சமயப்பணி ஆற்ற வருமாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

"இதே வேளையில் உடுப்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரமும் தமிழினம் ஒரே தலைவனின் கீழ் ஒன்றுபட வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளார். திரு. சிவசிதம்பரத்தின் இந்த ஆசை நிறைவேற வேண்டுமாயின் திரு.


(9ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு எதிராக மற்ருேர் சிங்களவெறிக் கட்சி!

### மாஜி யூ. என். பி. செயலாளர் விஷம் கக்குகிருர்!

தமிழர்களை இந்நாட்டிலிருந்து தொலைத்துக் கட்டும் நோக்குடன் புதிய சிங்கள இனவெறிக்கட்சியொன்று தோன்றியுள்ளது. சிங்கள ஜாதிக பெரமுனை என்ற பெயரைக் கொண்ட இக் கட்சியை முன்னாள் யூ. என். பி. பொதுச் செய

(9ம் பக்கம் பார்க்க)




## தமிழ் பல்கலைக் கழகத்துக்கு சிங்காரவேலன் ஆதரவு!

இந்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகமே நிறுவப்பட வேண்டும். அதற்கு நாவலர் பெயர் சூட்டப்பட வேண்டும்.

—இந்தக் கருத்தை செஞ்சொற்கொண்டல் வித்துவான் சொ. சிங்காரவேலன் நாவலர் மாநாட்டில் பேசும் போது வெளியிட்டார். அவர் கூறியதாவது:-

"ஆறுமுக நாவலர் பிறந்த ஈழத்திலே ஒரு குறை நிலவுகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று இல்லாத குறையே அது. உடனடியாக தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும். அதற்கு நாவலர் பெயர் சூட்டப்படுமானல் அது அவருக்கு செய்யும் மற்ருேர் நன்றிக்கடனாக இருக்கும்."

இவ் விழாவில் பேசிய முஸ்லிம் அறிஞரான ஜனாப் எஸ். எம். கமால்தீனும் நாவலர் பெயரில் தமிழ் பல்கலைக் கழகம் நிறுவப்படுவதை முஸ்லிம்கள் மிக மிக வரவேற்கிரார்கள் என்று குறிப்பிட்டார்.

# இந்துக்களை மதம்மாற்றும் பிக்கு நாவலர் விழாவுக்கு அழைக்கப்பட்டதேன்?

## பொதுமக்களுக்கு ஏற்பட்ட சில ஐயங்கள்!

யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் சிறப்புற நடைபெற்ற நாவலர் சிலைத் திறப்பு விழாவுக்கு, தமிழர்கள் மீது பௌத்தத்தையும் சிங்களத்தையும் திட்டமிட்டுத் திணித்து இந்துக்களைப் பௌத்த சிங்களவர்களாக்கும் இன ஒழிப்பு நடவடிக்கையில் முன்னணி வகிக்கும் கடவத்த நந்தாராம தேரோ என்ற பௌத்த பிக்கு அழைக்கப்பட்டதேன்? இந்தப் பிக்குவை அழைப்பதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் யார்? பௌத்த மதத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவரும் இதில் கலந்து கொள்வது அவசியமெனக் கண்டால், தமிழர்கள் மீது கொஞ்ச நஞ்சமேனும் அனுதாபமுள்ள ஒரு பிக்குவைத் தென்னிலங்கையிலிருந்து அழைப்பித்திருக்கலாமே!

"தமிழ் நன்கு பேசத் தெரிந்தவர் என்று கூறப்படும் குறித்த பௌத்த பிக்கு தமிழர் பெருங் கூட்டத்தில் ஒரு சொல்கூட தமிழில் பேசாது தனிச்

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நீ போ நானும் அங்கே உன்னோடு!

## அத்தியாயம் (25)

எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடங்கொடுக்காமல் தெருவாயில் வரை நடந்துசென்ற உமா சற்றுத் தாமதித்துத் திரும்பிப்பார்த்தாள். குழந்தை உமா அவன் காலைக் கட்டிக் கொள்வதையும் ஜெயநாதன் குழந்தையை வாரி எடுப்பதையும் கவனித்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சுடன் ஏதோ சாதிக்க முடியாத ஒன்றைச் சாதித்துவிட்ட வெற்றிப் பெருமிதத்துடன் அவள் திரும்பித் தன் நடையைத் தொடர்ந்தபோது அவள் எதிரே வந்து கொண்டிருந்தான் ரகு.

'உமா நீயா...? என்று வினவிவிட்டு அவன் அவளை ஆச்சரியத்தோடு பார்த்த போது உமாவின் கலங்காத மனமும் கலங்கவேசெய்தது. அவளுக்குச் சிறிது அழுது கொட்ட வேண்டும் போல் இருந்தது. ஆயினும் மிகுந்த சிரமத்தோடு தன் உணர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு இனிமேல்நான் எங்கே போகவேண்டுமோ... அங்கே போய்க் கொண்டிருக்கிறேன் ரகு' என்று கூறிவிட்டுத் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

பவானியின் பொறுப்பு முடிந்ததும் உமாவைச் சந்தித்து அவளது எதிர்காலத் திட்டங்களை பற்றியெல்லாம் கலந்துரையாடி அவள் வாழ வழிவகுக்க வேண்டும் எனக் காத்திருந்த ரகுவுக்கு அவள் பதில் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதிலும் அவள் அவனிடம் சொல்லாமற் கொள்ளாமல் சென்றது அவன் இதயத்தைத் தாக்கக் கூடிய பெருவேதனையாகவும் இருந்தது. அவளை இப்படியே தன் போக்குக்கு விட்டால் நிலைமை மோசமாகிவிடுமென அஞ்சி எங்கே நீயோ நானும் அங்கேதான் இருக்க ஆசைப்படுகிறேன் உமா தயவு செய்து நான் கூறுவதைக் கேள், நீ இனி எங்கும் போகக் கூடாது. உனக்காக இந்த ரகு எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதைத் தயவு செய்து மறந்துவிடாதே நீ மட்டும் மனம் விரும்பினால் உன்னைச் சட்டப்படி திருமணஞ் செய்து உன்னுடன் வாழ நான் காத்திருக்கிறேன். உன்னால் சூனியமான என் வாழ்வு உன்னாலேயே நிரம்பட்டும் வேண்டுமானால் ஜெயநாதன் முன்னிலையிலேயே உன்னை நான் என் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன் என்று ரகு கெஞ்சிய போது உமா மௌனமாகச் சிரித்தாள்.

உங்கள் உயர்ந்த அன்புக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் ரகு. நீங்கள் மிகவும் நல்லவர். உங்களிடம் உயர்ந்த பண்பு உண்டு என்பதும் அறிவேன். ஆயினும் நான் ஒரு பெண் என்பது என்னைப் பொறுத்த வரை இன்னும் மறந்து விடவில்லை. என் பெண்மை என்னை அறிவுறுத்துகிறது. ஆகவே எனக்கு மட்டும் ஆசையில்லை அன்பில்லை மனிதாபிமானம் இல்லை என்பது அர்த்தமல்ல அவற்றையெல்லாம் அடக்கி கற்புநெறியில் நடப்பது தான் பெண்களுக்கு அழகு.

'காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டோட எப்போதும் ஆயத்தமாகத்தான் இருக்கும் ஆனால் அதைத் தேக்கி அணைக்கட்டுக்குள் அடக்கி வேண்டியபோது வெளியே பாய்ச்சுவதுதான் அதன் வெள்ளத்திற்கே பெருமைதருவது. என்னை நிட்சயமாக நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. அதனால் தயவு செய்து என்னை மன்னித்து மறந்து விடுங்கள். உங்கள் உதவி எனக்குத் தேவை என்று உணர்ந்தால் இந்த உமாவுக்காக ஒரு ரகு இந்த உலகத்தின் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை மறவாமல் உங்களிடம் வருவேன். தயவு செய்து இப்போது என்னைத்தடுக்காமல் எனக்கு வழி விடுங்கள் என்று கூறிய போது ரகு மறுவார்த்தை பேச முடியாமல் அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ரகுவின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போன்றிருந்தது. உமாவைப் பின் தொடர அவன் உள்ளந் துடித்த போதும் பவானியிடம் சொல்லிக் கொள்ளாமல் அவளுக்கு வரவேற்பு எப்படியிருந்தது என்பதை அறியாமல் செல்வதற்கு அவன் மனம் சிறிதும் ஒப்பவில்லை. உமாவையும் பவானியையும் அவன் மனம் எடை போட்டபோது உமாவை விட பவானியைப் பற்றித்தான் அவன் மனம் அதிகமாகக் கவலைப்பட்டது. உமா தைரியமானவள், எதையும் தாங்கக்கூடிய இதயம் படைத்தவள் என்பதை அவன் கடந்த இரவு அநுபவத்தில் இருந்து உணர்ந்து கொண்டான்.

ஆனால் பவானி ஆமாம்! பவானி அவளால் துன்பத்தின் சாயலையே தாங்கமுடியாது என்பதை அவள் தற்கொலைசெய்துகொள்ள வந்ததிலிருந்தே அவன் அறிந்து வைத்திருந்தான். உமா எங்காவது பாதுகாப்பான இடத்திற்குத்தான் போவாளென்ற எண்ணம் மனதில் நிலைத்ததும் அவன் ஜெயநாதனின் வீட்டுக்குள் நடந்து சென்றான். பவானியும் குழந்தை உமாவும் ஜெயநாதனுடன் சேர்ந்து ஓர் அழகிய குடும்பமாக நின்றதைக் கண்ட அவன் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன.

வாருங்கள், அண்ணா..... என்னை உரியவரிடத்தில் சேர்த்ததும் தொலைந்தது சனியன் என்று அங்கே கூறிக் கொள்ளாமற் போய்விடுவீர்களோ என்று பயந்திருந்தேன். எப்படியோ வந்து விட்டீர்கள். ஆமாம்! பார்த்தீர்களா அண்ணா உங்கள் மருமானை... அப்பாவைக் கண்டதும் என்னை மட்டுந்தான் மறந்து விட்டான் என்று நினைத்தேன். இப்போ பார்க்கும்போது உங்களையும் கூடத்தான் மறந்துவிட்டான்...... இல்லையா அண்ணா...? என்று கூறி பவானி அவனை வரவேற்றபோது அவன் உள்ளத்தின் பூரிப்பையும் பெண்மையின் பெருமையையும் அவனால் தெளிவாகக் கண்டு கொள்ள முடிந்தது. இத்தனை நாளும் பட்ட கஷ்டத்தின் பலனை அனுபவித்து விட்ட திருப்தியில அவன அவர்கள் இருவரையும் தன் மனமார ஆசிர்வதித்து விட்டு 'நீரை விட இரத்தந் தடிப்பமானது என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி கூறுவார்கள் அல்லவா அது இதுதான் தங்கச்சி என்று சொல்லிச் சிரித்தான் அவன். குழந்தை உமா ஜெகநாதனின் தோள்மேல் இருந்து கொண்டே அவனைப்பார்த்து 'கலகல' எனச் சிரித்தான்.



கடந்த இரவு முழுதும் அவ்வளவு அட்டகாசம் புரிந்த ஜெயநாதன்தானா இப்படிப் பட்ட குடும்பப் பொறுப்புள்ள ஆண்பிள்ளையாக இங்கே நிற்பது என்பதே அவனுக்குச் சந்தேகமாக இருந்தது.

"குழந்தை உங்களோடு ஒட்டிக் கொண்டு விட்டான். இனி உங்கள் விருப்பப்படி நீங்கள் எங்கும் செல்ல முடியாது. அதற்கு அவன் அனுமதிக்கவும் மாட்டான்" என்று ரகு அவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்த போது ஜெயநாதனின் முகத்தில் அசடு வழிந்தது.

'ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது. அவற்றையெல்லாம் கனவுபோல நினைத்து மறந்து விடுவது தான் புத்திசாலித் தனம், கடந்த இரவு நிகழ்ச்சிக்காக நான் மிகவும் மனம் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்; பவானியைக் கண்டதும என் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி நிட்சயமாக ஏற்படும் என்று நினைத்தேன். ஆனல் உமா ஒரு பிரச்சனையாக இருப்பாள் என்று நான் எண்ணியதற்கு எதிர் மாறாக அவளாகவே என் பாதையில் இருந்து முற்றாக விலகிக் கொண்டாள். அவள் பெருந்தன்மையை நான் போற்றும் அதே நேரத்தில் அவள் எதிர்காலத்தைப் பற்றி என்னால் கவலைப்படாமலும் இருக்க முடியவில்லை. அவளுக்குப் பெருந் துரோகஞ் செய்துவிட்டேனே என்ற வினை என் உள்ளத்தில் பெரிய இராட்சதன் போல் என்னை அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது. ரகு உங்களிடம் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதெல்லாம் உங்கள் தங்கை நிம்மதியாக வாழவேண்டுமென நீங்கள் விரும்பினால் இதுவரை எனக்குப் பெயரளவில் மனைவியாக இருந்துவிட்டு நான் செய்த கொடுமைகளை எல்லாம் மறந்து மன்னித்து தன்னைப் போன்றதோர் பெண்பிறவிக்கு என்னைச் சுவராக்கிவிட்டு பெண்மையின் பெருமை பொங்கப் பூரித்து நடந்து செல்கிறாளே உத்தமி உமா அவளை வாழவையுங்கள். அப்போதுதான் நானும் நிம்மதியாக வாழமுடியும். எனக்காக அல்லாவிட்டாலும் உங்கள் பவானியின் நல்வாழ்வின் பொருட்டாவது இதை நீங்கள் கண்டிப்பாகச் செய்தே ஆகவேண்டும் என்று ஜெயநாதன் உள்ளம் உருகப் பேசியபோது ரகுவால் சில நிமிடநேரம் எதுவுமே பேச முடியவில்லை.

சரி.........இந்த உதவியை நான் எப்படியும் செய்து முடிப்பேன. என் தங்கை பவானியையும் அவள் குழந்தை உமாவையும் கண் கலங்காமல் காப்பது இனி உங்கள் கடமை. நான் வருகிறேன்...... பவானி... நான் சென்று வருகிறேன் அம்மா...'' கண்ணில் திரையிட்ட நீர் விழிகோணத்தினூடாக வழிவதற்கு முன் ரகு தன் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

உமாவைத்தேட ரகு எடுத்த முயற்சிகள் எல்லாம் விணாகிய நிலையில் அவன் டாக்டர் ராஜன் வீட்டுக்குள் காலடியெடுத்து வைத்தான்; அதேநேரம நர்ஸ் நிர்மலா டியூட்டி முடிந்து வீட்டுக்குச்செல்ல வந்து கொண்டிருந்தாள். 'குட் மோனிங் நிர்மலா' ரகு அவளுக்குக் காலைவணக்கம் கூறியபோது அவளும் பதில் வணக்கம்கூறிவிட்டு அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். 'டாக்டர் உங்களை அவசரமாகத் தேடிக் கொண்டிருந்தார். கப்பல் இன்னும் இரண்டு நாளில் புறப்பட இருப்பதாகவும் வெளிநாடு செல்ல உங்கள் முடிவை அறிய வேண்டும் எனவும் கூறினார். நீங்கள் நிட்சயமாகவே போவதாக முடிவு செய்து விட்டீர்களா...? என்று ரகுவைப் பார்த்து அவள் கேட்டபோது அவள் குரல் கம்மிற்று.

'யெஸ் நிர்மலா......என்னைப் பொறுத்தவரையில் நான் எதையும் ஒருமுறைதான் வாழ்க்கையில் முடிவு செய்வதுண்டு. சிலவாரங்கட்கு முன்பு நான் செய்து கொண்ட நல்ல முடிவை இனி எவரும் எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது. என் நாட்டுக்கு நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்து விட்டேன். தற்போது என் நிம்மதிக்காக நான் அந்நிய நாட்டை நாடிச் செல்கிறேன். நிர்மலா நீ எனக்குச் செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி கூறக்காத்திருந்தேன். என் உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இப்பொதே பிரியாவிடையும் கூறி விடுகிறேன். சந்தர்ப்பம் வந்தால் மீண்டும் சந்திப்போம். நான் ஒரு காலத்தில் திரும்பி வரும்போது உன்னைக் குடியும் குடித்தனமுமாகப் பார்க்க ஆசைப் படுகிறேன். சரி நான் வருகிறேன் நிர்மலா......

'ஹலலோ ரகு நானே உனக்கு அவசரமாக ஆள் அனுப்ப எண்ணியிருந்தேன்... நீயே வந்துவிட்டாய். ஆமாம் நான் குறிப்பிட்ட கப்பல் நாளை நின்று பின்னேரம் புறப்பட இருக்கிறது. வேண்டியவர்களிடம் உன்னைப்பற்றி எல்லாம் கூ

(11ம் பக்கம் பார்க்க)

## வாசகர்களுக்கு ஓர் வார்த்தை

அன்பார்ந்த வாசக நேயர்களுக்கு!

சுதந்திரன் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு "எங்கே நீயோ நானும் அங்கே" என்ற தொடர் நவீனத்தை எழுதி முடித்தேன். கதை அவசரப் படைப்பாக இருந்த போதும் பல நேயர்கள் அளித்த ஆதரவும் பாராட்டும் கதையை இன்னும் சிறப்பாக எழுத எனக்கு ஊக்கத்தை நல்கியது.

எனது கதைகள் எந்தப் பத்திரிகையில் வந்தாலும் பாரபட்சம் பார்க்காமல் பாராட்டுத் தெரிவிக்கும் வாசக அன்பர்களே எழுத்துலகில் நான் இவ்வளவு முன்னேறியதற்கு முதற் காரணம்.

உமாவைச் சாக அடித்துவிடாதீர்கள் என்று பல அன்பர்கள் கேட்டிருந்தார்கள். வாழவைப்பதும் சாகடிப்பதும் கதை எழுதும் போது இருக்கும் மனநிலையையும் கதைப் போக்கையும் பொறுத்தது. ஆயினும் எனது இந்தக் கதையின் முடிவு பலருக்கும் பிடித்திருக்கும் என்பதே என் நம்பிக்கை.

கடந்த இருபத்தைந்து வாரங்களாக மிகுந்த பொறுமையுடன் என் கதையைப் படித்து எனக்கு ஊக்கம் அளித்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி நவில்கிறேன்.

கடைசியாக உங்களுக்கும் எனக்கும் ஒரு பாலம் போலமைந்து எனது கதையைச் ஒரு எழுத்துப் பிழை கூட இல்லாமல் (என் எழுத்து அத்தனை மோசம்) பிரசுரித்த சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் குழுவினருக்கும் என் உள்ளங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

வணக்கம்.

திருமதி பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கம்.

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப்பாருங்கள்!

திருவாளர் குயுக்தி !!!

க. ஜெயானந்தன்
மாதகல்.

கே: தங்களுக்குத் 'தின பதி' ஆசிரியர் பதவி கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

ப: உடனே இராஜினுமாச் செய்து விடுவேன்.

கே: நேர்மையற்ற முறையில் பணம் சம்பாதிக்கும் மனிதர் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: நேர்மையான முறையில் பணம் சம்பாதிக்க முடியாதென்பதை தெரிந்து கொண்ட புத்திசாலிகள் அவர்கள்!

கே: கொலை, கொள்ளை, களவு என்ற மூன்று சொற்களையும் தமிழ் மொழியில் இருந்து கொலை செய்ய முடியாதா?

ப: அந்த மூன்று சொற்களும் தமிழில் இல்லாவிட்டால், நமது தமிழ்த் தினசரிகள் பாடு பெரிய திண்டாட்டமாகிவிடுமே!

ஃ

கே. இராசரத்தினம்
வெள்ளவத்தை.

கே: பெரிய சேனநாயகாவும் டட்லி சேனநாயகாவும் போல தமிழர்களுக்கு உதவியவர்கள் யாருமில்லை என நாவலர் சிலை வழியனுப்பு விழாவில் திரு. சிறீகாந்தா கூறியது எதைக் காட்டுகிறது?

ப: சிங்கள ஆட்சியாளர்களுக்கு அவர் பந்தம் பிடிக்கிருரென்பதை!

கே: நாவலர் சபையில் இருப்பவர்களைப்பற்றி... ...?

ப; பல நல்லவர்கள் இருக்கிருர்கள் நல்லவர்கள்போல நடிப்பவர்கள் சிலரும் இருக்கிருர்கள்.

ஃ

ச. இராசு
யாழ்ப்பாணம்.

கே: தமிழினத்துக்கு திரு. பொன்னம்பலம் செய்யக் கூடிய பெரியநன்மை என்ன?

ப: மதுரை சோமசுந்தர அடிகளார் ஆலோசனை கூறியிருப்பது போல அரசியலிலிருந்து வெளியேறி 'ஸ்ரீலஸ்ரீ' பொன்னம்பலத் தம்பிராணுகி' விடுவதுதான்!

ஃ

அ. கனகசூரியர்
ஊரெழு மேற்கு,
சுன்னுகம்.

கே; தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி அவர்களின் முகவரியைத் தெரிவிப்பீர்களா?

ப; கோபாலபுரம், சென்னை.

ஃ

எம். கே. சிவராஜன்
அல்வாய்வடக்கு

கே: தீண்டாமையை ஆதரித்த நாவலர் அவர்கட்கு சிலை எழுப்புவதை நமது புனிதமான தமிழரசுக்கட்சி எதற்காக ஆதரிக்கின்றது?

கே: நாவலர் காலத்தில் தீண்டாமையை எதிர்த்தோ ஆதரித்தோ எவ்வித கிளர்ச்சியும் நடைபெற்றதில்லை. ஆகவே தீண்டாமையை நாவலர் ஆதரித்து நின்ருர் என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை! சைவசமுதாயத்தை அழிவிலிருந்து காக்க நாவலர் போராடி ரேதவிர சமயசீர்திருத்தம் செய்வதை அவர் அந்நேரத்தில் தமது பணியாகக் கொள்ளவில்லை.

ஃ

சீ. வே. சந்திரசேகரம்
திருக்கோவில்.

கே: சிங்கள அடிமை முகாமில் தமிழ்ப் பிள்ளைகள் பட்ட கொடுமை என்ன?

ப: அதன் விபரங்களை 16-6-69 சுதந்திரனில் பாருங்கள்!

ஃ

யாரோ இருவர்
மண்டைதீவு.

கே: தீவுப்பகுதிக்கு வருகின்ற தேர்தலில் நிற்கும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பற்றிய உங்கள் கருத்தென்ன? தீவுப்பகுதிகளின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப: 24 மணி நேரமும் மக்கள் பணியாற்றும் பண்டிதரின் தலைமையில் தீவுத்தொகுதி நிச்சயம் முன்னேற்றப் பாதையிற் செல்லும்!

கே: கோப்பாய் கோமான் திரு வன்னியசிங்கம் அவர்கள் இன்று உயிருடனிருந்தால்......

கே: கட்சிக்கட்டுப்பாட்டை உடைத்தெறிபவர்களின் வாலை ஒட்ட நறுக்கியிருப்பார்!

ஃ

எம். ஏ. கணேசமூர்த்தி
திருக்கோவில்.

கே: சிங்கள இனவெறியர்களின் பறைத்தமிழனைத் துரத்து என்னும் சுவரொட்டி விளம்பரத்தை தமிழ் ஏடான சுதந்திரன் சிறுதலையங்கம் கொடுக்காமல் கொட்டை எழுத்தில் முன்பக்கத்தில் பிரசுரித்துள்ளதே. இனவெறியினருக்கு உதவி செய்யும் நோக்கமா?

ப; அல்ல; தமிழன் தனது நிலையை உணரவேண்டுமென்பதற்காக!

ஃ

சாரத்,
மண்டைதீவு.

கே: உடல், பொருள் ஆவி அனைத்தையும் தமிழ் அன்னைக்காக அர்ப்பணிப்பேன் என்றவர்கள் இப்போது செய்வது என்ன?

ப: தமிழினத்துக்காக மூச்சுவிடாமல் உழைத்து வரும் தமிழரசுக்கட்சியின் முதுகில் குத்திவிட்டு தனிக்கட்சி அமைத்து தலைவனுகப் பார்க்கிருர்கள்!

கே: கவலையற்ற வாழ்வு வாழ்வதற்கு......?

ப: கண்ணை மூடிவிட வேண்டும்!

கே: திரு. வ. நவரத்தினம் பற்றி சிலவார்த்தைகள்...?

ப: எந்த ஒரு இயக்கத்திலும் கட்டுப்பட்டு பணிபுரியும் அடக்கமற்றவர்; தனது கருத்துக்கு சார்பாக, மற்றவர்களைத் திருப்ப முடியும் என்ற தன்னம்பிக்கையற்றவர்; பொன்னம்பலத்தின் புதிய சீடர்: ஊர்காவற்றுறை மக்களால் அடுத்த தேர்தலின் போது விரட்டியடிக்கப்படவிருப்பவர்!

'சிவம்'
சுன்னுகம்.

கே; மாவட்ட சபையை எதிர்த்த பொன்னம்பலம், பசநாயகா இவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அற்ப நன்மை கூடத் தமிழினத்துக்குகிடைக்கக் கூடாதென்பதற்காக பசநாயகாவும், தமிழரசுக்கட்சி எதையும் சாதித்துவிடக் கூடாதேயென்ற பொருமை காரணமாக பொன்னம்பலமும் மாவட்ட சபையை எதிர்த்தனர்!

கே: 1947ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் கொள்கைக்கும் அதன் இன்றைய கொள்கைக்கும் வேறுபாடு என்ன?

ப: தமிழினத்தை அடிமைப்படுத்திய சோல்பரி ஒற்றையாட்சி அமைப்புக்கு எதிராக குரலெழுப்பி 1947ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்காங்கிரஸ், இன்று அதே ஒற்றையாட்சிக்கு மீண்டு சாத்தி, சிங்களவர்களின் நிரந்தர அடிமைகளாக தமிழ் பேசும் மக்களை [illegible] பார்க்கிறது!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

# வளரும் எழுத்தாளர்கள் [8]

(ஈழத்தமிழகத்தில் சந்திரபுரம் என்ளெரு ஊர் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? அந்த ஊரைச் சேர்ந்தவரான எஸ் பி. கிருஷ்ணன் தமது எழுத்துலகத் தொடர்பு பற்றி இங்கு கூறுகிருர் )

1957ம் ஆண்டு, எனது முதற் சிறுகதையான 'எச்சில் இலை' சுதந்திரனில் வெளிவந்தது. அந்த உற்சாகத்தோடு, மற்றைய தினசரிகளுக்கும் சிறுகதைகளை எழுதி அனுப்பினேன். எவையுமே பிரசுரமாகவில்லை. ஏமாற்றமடைந்து, எழுதுவதை நிறுத்தினேன்.

பத்தாண்டு இடைவெளிக்குப் பின், மீண்டும் எழுதத் துணிந்தேன். சிறுகதைக்கு ஏற்ற நல்லதொரு 'கரு' கிடைத்ததுதான் அதற்குக் காரணம். அந்தக்கரு என்னை எழுதுஎழுது என்று துரத்திக் கொண்டிருக்க... எழுதினேன் எழுதி எடுத்துக் கொண்டுபோய், ஒரு தினசரியின் வார வெளியீட்டு ஆசிரியரைக் கண்டு 'ஐயா... இது குப்பைத் தொட்டியில் போடும் கதையல்ல, எனவே தான் நேரில் கொண்டு வந்தேன். தயவுசெய்து, பார்த்து படித்து, தகுதியற்றதென்ருல், தாருங்கள்... நான் அடுத்தகிழமை வருகிறேன்... என்று கூறித் திரும்பினேன்.

அடுத்த போயா வெளியீட்டில் எனது சிறுகதை வெளியாகும எனும் விளம்பரம் வந்தது. அதற்கடுத்த போயா பத்திரிகையில் எனது 'வாழ்வளித்த கர்வம்' வெளிவந்தது. அன்று—

என்னுலும் தரமான கதை எழுத முடியும் என்ற துணிவு பிறந்தது. தொடர்ந்து வீரகேசரி, தினகரன், ஈழநாடு, ஜோதி, சுதந்திரன் கிழமை ஏடுகளில் எனது சிறுகதைகள் வெளிவந்தன.

1958ம் ஆண்டின் இனக்கலவரத்தை பின்னணியாகக் கொண்டு எழுதிய 'பெற்ற மனம்' சுதந்திரனில்தான் வெளிவந்தது. இதனை மற்ளெரு ஏடு பிரசுரிக்க அஞ்சிற்று.

இனக்கலவரம், சாதிப் பாகுபாடு, மாசுபடிந்த மதக் கொள்கை, போன்வற்றை பின்னணியாகக் கொண்டு பிறக்கும் சிறுகதைகளை பிரசுரிக்க எல்லா ஆசிரியர்களுக்கும் துணிவு இருப்பதில்லை. ஏனே?

எனது ''சந்திரிகா'', ''காலம் வந்தது'' ''பிறந்த மண்'' ''மன்னிப்பு'' ஆகியன வீரகேசரியிலும், ''பேச்சும் போக்கும்'', ''ஒன்றே தெய்வம்'' ''பிரளயத்தை எதிர்த்து'' ''எண்ணம்போல் வாழ்வு'' ஆகியன தினகரனிலும், ''நடைபாதையில்'' ''தெருக் காட்சி'' ''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' ஆகியன ஈழநாட்டிலும் வெளிவந்தவை.



சந்திரபுரம்
எஸ். பி. கிருஷ்ணன்

எனது 'வந்தது வசந்தம்' எனும் சிறுகதை சென்ற டிசெம்பரில் இலங்கை வானெலியில் ஒலிபரப்பாயிற்று.

எனது 'பிறந்த மண்' சந்திரபுரம். அது மட்டுவில் என்று, எப்போ எப்படி மாறியதே தெரியவில்லை. இதனை ஆராய்ந்து வருகிறேன். சந்திரமௌலீசர் சிவன் கோவில் ஒன்று இங்குண்டு, இது ஒரு பழைய தலம். சந்திரமௌலீசனே... என்று தேவாரம் வழங்குகிறது. மட்டுவில் மகாவித்தியாலயம் இன்று சந்திரபுர மகாவித்தியாலயமாக மாற்றிப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திரபுரம் எனது சிறு கதைகளில் வருவது கண்டு 'இப்பெயர் இந்தியப் பெயரா என்று நண்பர்கள் கேட்பார்கள். எனது 'பிறந்த மண்' என்ற சிறுகதை சந்திரபுர வளத்தை விவரிக்கின்றது.

என் வாழ்விலேயே முதல் முதலாக, கொழும்பு நகரிலே, ஒரு பிச்சைக்காரன் தெருவில்கிடந்த தகரப்பீப்பாவிலிருந்து எச்சில் இலை எடுத்து, உண்டதைக் கண்டு வருந்தினேன். அந்தக்காட்சி என்னை 'எச்சில் இலை' என்ற சிறுகதையைஎழுதத் தூண்டியது. சுதந்திரன் அதனை பிரசுரித்து ஊக்கியது. இதே போன்று, ''நடைபாதையில்'' ''தெருக்காட்சி'', எண்ணம்போல் வாழ்வு. ஆகியன ஏழையின்வாழ்க்கையிலிருந்து எழுந்தவை. நடைபாதையில் சப்பாத்து தைக்கும் 'சங்கரன் குடும்பம' மாலையில் கள்ளுக்குடிக்க கொட்டாஞ்சேனைக்குப் போகும். மாலையில் கொட்டாஞ்சேனை பஸ்கள் நிறைந்து வழியும். இதனை வர்ணித்தது எனது ''பேச்சும் போக்கும்.''

இரகுநாதனின் பஞ்சும் பசியும், நாராயணனின் ''தீண்டாதான்'' மு வவின் 'நெஞ்சில் ஒரு முள்' ஆகியன எனக்குப் பிடித்த நாவல்களில் சில 'புதுமைப் பித்தன்' எனக்கு 'சிறுகதை' வழிகாட்டி. நான் படிப்பது ஈழத்துச் சிறுகதைகளை விரும்புவது சிபார்சு அற்ற 'சிறுகதை'ப் பிரசுரத்தை. விரும்பாதவை.—நம் வாலிபர்கள் கொழும்பு நாகரிகத்தில் சிக்குவது சிதைவது வெளிவேடத்திற்காக மக்கள் கோவிலுக்குப் போவது

# விடியும் நாள்

—நயினை. நா. சிவராசசிங்கம்—

செத்தமொழி—தமிழ் மொழியின சேர்க்கை பெற்ற
சிறிய மொழி தமிழ்மொழியைச் சீறக் கண்டும்.
முத்தமிழன் படை கொணர்ந்த நாளிலெல்லாம்,
முடிதாழ்த்தி வணங்கியவர் ஆர்வம் கண்டும்,
பொத்தல்களைப் பிறமொழியில் திருடிச்சேர்த்த
புழுகுகளை இலக்கியம் என்றேதக் கேட்டும்,
இத்தரையில் தமிழ்ச் சாதி வருந்தும் வாழ்க்கை,
என்ளெழியும்? இன்ளெழியும், நாளைவெல்வோம்!
'மத்ய மகாவித்தியாலய' கல்விக்கூடம்,
வருவதொரு நூற்ருண்டு 'சியவச', 'சே
சத்த' என அவன் கூறும் பொருளோ என்ருல்,
தமிழ் மகனே உன் கரத்தில் இருந்த செங்கோல்!
சுத்தயிலாமொழியுன்னைக் குத்தக்குத்தச்
சூதகமா, உனக்கென்ன? துடித்தெழுந்தால்,
பித்தரெலாம் பொடியாவார், வெற்றி கொள்வோம்!
பேடிமையை நாம் ஒழிப்பதெந்த நாளோ?
கொஞ்சுமொழித்தமிழ்ச் சொல்லைக் கொன்றுபோட்டுக்
கொலைவாளில் பாராண்ட தமிழர் மாட்டே,
நஞ்சுமொழி திணிக்கின்ற தீமை கண்டும்,
நாமெல்லாம் தமிழரென உயிர் வாழ்கின்ற,
தஞ்ச நிலை மாற்றிவிடத் தமிழர் சேர்ந்து,
தமிழ் முரசும், போர் முரசும் தட்டிக்கூவி,
வெஞ்சமரில் பகைவெல்ல அழைக்கும் நாளே,
விடியும் நாள், மற்றெல்லாம் மடியும் நாளே!
செத்ததையும் மற்றதையும் தின்று விட்டுச்
சிங்களத்திலெடுக்கின்ருள் வாந்தியென்ருல்,
அத்தனையும் விழுங்குவது தமிழர் பண்பா?
அன்னைமொழிக்கிழைக்கின்ற தீமை கண்டும்,
பொத்திய வாய் திறக்காமல் வாழ்வதெல்லாம்,
புதிதன்றே? புதிதன்றே? தமிழன் கண்ட,
கத்திமுனை வாழ்வின்று காணவேண்டும்!
கன்னி தமிழ் கைவிலங்கை நொறுக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# சிலை நிறுவியதும் கடமை முடிந்ததா?

நாவலர் பெருமானுக்கு உள்ளம் பூரிக்கச் சிலையெடுத்துப் பெருவிழாவும் நடத்தி முடித்து விட்டோம்!

நாவலரது பெருமைகளை - அவர் ஆற்றிய சீர்மிகு பணிகளைப் பற்றி எல்லாம் அடுக்கடுக்காக - அழகு தமிழில் எடுத்துக் கூறிவிட்டோம்!

பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளும், பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்குத் தாளம் போடுபவர்களும் கூட ஆங்கில கிறிஸ்தவ ஏகாதிபத்தியத்தை வன்மையாக எதிர்த்த ஆறுமுக நாவலருக்குப் புகழாரம் சூட்டினர்கள். சிறப்பு மலர்களும் வெளியிட்டார்கள்.

நல்ல வேடிக்கை!

ஆறுமுகநாவலரின் சிலை இவர்களைப் பார்த்து இரத்தக் கண்ணீர் வடித்திருக்கும்!

"எந்த இலட்சியங்களுக்காக நான் என் வாழ்க்கையை அர்ப்பணித்தேனே - எந்தக் கொள்கையை நிலைநாட்ட நான் விடாப்பிடியாகப் போராடினேனே, அந்த இலட்சியங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் இந்நேரத்தில் எனக்குச் சிலை வடித்து எதற்காக மாய்மாலக் கண்ணீர் வடிக்கிறீர்கள்?" என ஆறுமுகநாவலர் சிலை பேசியிருக்கும்!

ஆம், தமிழர்களிடம் ஆங்கிலத்தையும் கிறித்துவத்தையும் வலுக்கட்டாயமாகத் திணித்தது அந்நிய ஏகாதிபத்தியம். அதை எதிர்த்துப் பொங்கி எழுந்தார் ஆறுமுகநாவலர் அன்று!

இன்றைய நிலை என்ன?

அதைவிடப் பயங்கரமான சூழ்நிலை; சைவத் தமிழர்களை பௌத்த சிங்களவர்களாக்கும் சூழ்ச்சி வேலை திட்டமிட்டு நடக்கிறது. பாடசாலைகளை நிறுவி - உத்தியோக சலுகைகளையும், ஆசை வார்த்தைகளையும் காட்டி ஏழைத் தமிழர்களை மயக்க முனைகிறது பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம்!

பழம் பெரும் சைவக் கோவில்கள் ஒவ்வொன்றாகப் பறிபோகின்றன. கதிர்காமமும், கோணேஸ்வரமும் மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கின்றன. நாளை இன்னும் எத்தனை இந்துக்களுக்குச் சொந்தமான ஆலயங்கள் பறிபோகப் போகின்றனவோ!

நாவலர் இன்றிருந்தால் இந்த அட்டூழியத்தைக் கண்டு எரிமலை போலக் குமுறியிருப்பார். எரிதழல்போலப் பொங்கி எழுந்திருப்பார். தமிழர்களைத் திரட்டிச் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அணிவகுத்துப் பெரிய போராட்டத்தையே பிரகடனப்படுத்தி இருப்பார்.

ஆனால், நாவலருக்கு விழா எடுத்தவர்களில் எத்தனை பேருக்கு இந்த உணர்ச்சி இருக்கிறது?

விரல் விட்டெண்ணி விடலாம்!

நாவலருக்கு சிலைநிறுவி விழா எடுத்துவிட்டு, பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு அஞ்சியும் கெஞ்சியும் ஈனவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பது தமிழனுக்கு நிச்சயம் பெருமையளிப்பதாக இருக்கமுடியாது.

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் இல்லாதவர்களுக்கு நாவலர் பெயரை உச்சரிக்கக்கூட அருகதை கிடையாது!

நாவலருக்கு சிலைநிறுவி, ஒவ்வோர் ஆண்டும் அவருக்கு விழா எடுப்பதாலும் ஒப்புக்கு அழுவதாலும் தமிழன் கடமை முடிந்து விடவில்லை.

இந்நாட்டில் தமிழும் சைவமும் பெரும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும்.

இதற்காக பௌத்த சிங்களஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடக்கூடிய விடுதலை வீரர்களாக தமிழினத்தவரை உருவாக்க வேண்டும்!

நாவலர் விழாக்கள் இதற்கே பயன்பட வேண்டும்! இதை விடுத்து நாவலருக்கு எடுக்கும் விழாக்கள் வெறும் முகஸ்துதி விழாக்களாகவும் நடிப்புச் சுதேசிகளின் விழாக்களாகவும் அமையக் கூடாது.

நாவலர் பெயரைச் சொல்லி இந்துப் பல்கலைக் கழகம் என்ற கூக்குரலை எழுப்பி அரசியல் ஆதாயம் தேடவும் முயற்சி நடக்கிறது! இந்த முயற்சி ஒன்றுபட்ட தமிழினத்திடம் பலிக்கப் போவதில்லை!

இந்துப்பல்கலைக்கழகம் என்பது கால் ரூபா; தமிழ்ப்பல்கலைக்கழகம் என்பது ஒரு ரூபா: எனவே ஒரு ரூபாவுக்குள் கால் ரூபாவும் அடங்குவது போல தமிழ்ப் பல்கலைக் கழகத்துள் இந்துப்பல்கலைக்கழகமும் அடங்குகிறது!

இந்நிலையில் இந்துப்பல்கலைக்கழகம் எனத் தனித்து குரலெழுப்புவது தமிழினத்தைப் பிரித்தழிக்க முயலும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியவாதிகளுக்கே பயன் படும்!

# யூ. என். பி. தனக்குத்தானே ஆழக்குழி தோண்டுகிறதா?

## தமிழ் விரோத செயல்களை நிறுத்து!! இன்றேல் அழியப்போவது திண்ணம்!!

'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதை போல தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் தனது திட்டத்தை மீண்டும் செயற்படுத்த முனைந்திருக்கிறது யூ. என். பி. ஆட்சி. ஒட்டிசுட்டான் விவசாயப்படையில் காலியான இடங்களுக்குத் தென்னிலங்கையிலிருந்து சிங்கள வாலிபர்களைப் பெருந்தொகையாகக் கொண்டு சென்று புகுத்தியதுடன் முத்தையன்கட்டுக் குடியேற்றத் திட்டத்தில் சிங்களவர்களுக்கு நிலம் வழங்கித் தமிழ் நிலத்தை அபகரிக்கவும் யூ. என். பி ஆட்சியாளர் முனைந்திருக்கின்றனர்.

தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடனிருந்த வரை இத்தகைய தமிழினத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் எதையும் எடுக்க ஆட்சியாளர் அஞ்சினர். தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் வாதாடியும் போராடியும் தான் தமிழ்ப் பிரதேசத்தில் நிறுவப்படும் விவசாயப் படைகளில் தமிழ் வாலிபர்களே இடம்பெற வேண்டுமென்ற நிலையை ஸ்தாபித்தது. அரசாங்கமும் இக்கொள்கையை ஒப்புக்கொண்டு தமிழ் இளைஞர்களையே தமிழ்ப் பகுதி விவசாயப் படைக்குத் தெரிவு செய்து வந்தது.

ஆனால் இன்று தமிழரசுக் கட்சி தம்முடன் இல்லையென்ற துணிச்சலால் தமிழ் பகுதி விவசாயப் படையில் சிங்களவர்களைக் கொண்டு சென்று நிரப்பப் பார்க்கிறது ஆட்சிபீடம்.

இப்பிரச்சினையில் அரசாங்கத்துடன் இன்றுவரை ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சி இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அக்கட்சி எதிர்த்தாலும் அந்த எதிர்ப்பை அரசாங்கக் கட்சி மதிப்பதாகவும் இல்லை. மதிப்பில்லாத இடத்தில் மானங்கெட்டு இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிறது தமிழ் காங்கிரஸ்.

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

தமிழ் காங்கிரஸ் யூ. என். பி.யின் நிரந்தர அடிமை. அடிமையொருவன் எசமானரை ஒருபோதுமே எதிர்க்க முன்வர மாட்டான். வேண்டுமானால் எதிர்ப்பதுபோல பாசாங்கு பண்ணலாம். அவ்வளவுதான்.

தமிழ் காங்கிரஸ் கையாலாகாதகட்சி என்பதும் தமிழரசுக்கட்சி யொன்றுக்குத்தான் சிங்கள ஏகாதிபத்தியம் அஞ்சி நடுங்குகிறது என்பதையும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

யூ. என். பி. ஆட்சிபீடத்தை எச்சரிக்க விரும்புகிறோம். தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்துக்கு உடன் முற்றுப்புள்ளி வையுங்கள். இன்றேல் உங்கள் ஆட்சிக்குச் சீட்டுக் கிழிக்கும் காலம் அதிக தூரத்திலில்லை.

எப்படி ஆட்சிக்கு வந்தோம் என்பதை மறந்து பேயாட்டம் ஆடாதீர்கள். தமிழரசுத் தந்தையின் கையெழுத்திட்ட கடிதம் இல்லாவிட்டால் அன்று நீங்கள் அதிகாரத்துக்கு வந்திருக்க முடியாது. எப்படி அதிகாரத்துக்கு வந்தோம் என்பதை மறந்து - நன்றியில்லாது தமிழினத்தை அழித்து ஒழிக்கும் திட்டங்களைத் தீட்டாதீர்கள். அப்படித் தமிழின விரோத நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட்டால், உங்களுக்கும் உங்களது ஆட்சிக்கும் அழிவு காலம் நெருங்குகிறது என்பதுதான் அர்த்தம்.

பொதுத் தேர்தலுக்கு அதிக காலமில்லை. தமிழர்களுக்கு எதிராக - தமிழ் இனத்துக்குப் பாதகமாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை உடன் நிறுத்தாவிட்டால் தேர்தலின்போது ஒரு தமிழன் கூட உங்களுக்கு வாக்களிக்க மாட்டான். யூ. என். பி. பழையபடி '8' பேர் கொண்ட கட்சியாகிவிடும். இதை மறந்துவிட வேண்டாம்.

யூ. என். பி. ஆட்சி தமிழினத்துக்கு எதிராக எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும், அது தனக்குத் தானே ஆழக் குழிவெட்டுகிறது என்றே கருதுகிறோம்.

# புதுக்கட்சி அமைப்பதால் துரோகத்தை மறைக்க முடியுமா?

ஊர்காவற்றுறை பா. உ. திரு. வி. நவரத்தினம் புதிய கட்சியொன்றை ஏற்படுத்தப் போகிறாராம். அதற்காக அரசியல் ஆலோசனைக் கூட்டங்களை அவர் ஆங்காங்கே நடத்திவருகிறாராம்.

இத்தகைய ஆலோசனைக் கூட்டமொன்றுக்கான அழைப்பிதழ் கடிதமொன்றை அண்மையில் நாம் பார்க்க நேர்ந்தது. அக்கடிதத்தில், தமிழரசுக் கட்சியிலிருந்துதாம் வெளியேற்றப்பட்டது குறித்து எதையும் திரு. நவரத்தினம் குறிப்பிடாமல் விட்டிருக்கிறார்.

திரு. நவரத்தினம் தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டைமீறி கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் இழுக்கு ஏற்படுத்தியவர். கட்சிப் பொதுக் குழுவினால் கட்சியிலிருந்து ஏகமனதாக கல்தா கொடுக்கப்பட்டவர். இந்த உண்மைகளை தனது தொகுதி மக்களிடமிருந்து எனைதான் முயன்றாலும் திரு. நவரத்தினத்தால் மூடி மறைத்து விடமுடியாது.

தீவுப்பகுதி மக்கள் திரு. நவரத்தினத்துக்கு கடந்த தேர்தலில் வாக்களிக்கவில்லை; தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்துக்குத்தான் வாக்களித்தனர். எனவே மக்களுக்குத் தாம அளித்தவாக்குறுதியை மீறி — மக்கள் கொடுத்த கட்டளையை மீறி கட்சிக்குத் துரோகம் புரிந்த திரு. நவரத்தினத்துக்கு அரசியலில் இனி இடம் இல்லையென்பதை தீவுப்பகுதி மக்கள் எப்போதோ தீர்மானித்து விட்டார்கள்.

எனவேதான் தொகுதி மக்களை ஏமாற்றுவதற்காக புதிய கட்சி அமைப்பதாக மாய்மாலம் காட்டுகிறார் திரு. நவரத்தினம். திரு. நவரத்தினம் புதுக்கட்சி அமைத்துத் தமிழினத்தை மேலும் பிளவுபடுத்த முயற்சிப்பதை தீவுப்பகுதி மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. மு. மாணிக்கமும், சிவசுந்தரமும் அமைத்த கட்சிகளெல்லாம் இன்று போன இடம் தெரியவில்லை. இந்த நிலையில் நவரத்தினத்தின் புதுக்கட்சி ஆரம்பத்திலேயே செத்துப்பிறந்தாலும் ஆச்சரியமில்லை.

புதுக்கட்சி அமைப்பதால் மட்டும் தாம் செய்த துரோ-

(9ம் பக்கம் பார்க்க)

பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் கையாட்கள் தவிர வேறுயாரும் இந்துப் பல்கலைக்கழகக் கோரிக்கையை எழுப்ப மாட்டார்கள்!

நாவலர் விழாவில் வித்துவான் சிங்காரவேலனும் வண. மதுரநாயகமும் மற்றும் பல பெரியார்களும் குறிப்பிட்டதுபோல தமிழினத்துக்கு இன்றுவேண்டுவது பூரண நிறைவு பெற்ற ஓர் தமிழ்ப் பல்கலைக்கழகமே! அத் தமிழ் பல்கலைக்கழகத்துக்கு வேண்டுமானால் நாவலர்பெயர் சூட்டுவதுபற்றியும் எமக்கு ஆட்சேபனை இல்லை.

நாவலர் சிலை நிறுவி முடிந்ததும் தங்கள்கடமை முடிந்தது, எனச் சிலர் கருதலாம்! ஆனல் தமிழினத்தின் விடுதலைக்காக உழைப்பவர்களுக்கு இனித்தான் கடமையாரம்பமாகப் போகிறது!

பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைப் படுகுழியிலிருந்து தமிழினத்தை மீட்கப் போராடுவதே, அந்தக்கடமையாகும்.

அத்தகைய கடமையில் வெற்றி பெறுவதற்கு நாவலரது உருவச்சிலை நமக்கெல்லாம் ஆதர்சசக்தியாக விளங்கும் என எதிர்பார்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதியில் இரத்தினம் சுறுசுறுப்பு!

## ஊரூராக மக்களைச் சந்தித்துத் தமிழரசுக் கொள்கை விளக்கம்!

## அல்லைப்பிட்டி மண்டைத் தீவு புங்குடுதீவு எங்கும் புது ரத்தம் பாய்ச்சிய கிளைகள்!

## தமிழரசுக் கட்சிக்கு துரோகம்புரிந்தவரை பொதுத் தேர்தலில் தோற்கடிக்க மக்கள் உறுதி!



தலைவர் திரு. வே க; சோமசுந்தரம் (முன்னைய தலைவர்) செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு, பொருளாளர் திரு. வே. நாகேசு.

தீவுத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்திலிறங்கியுள்ள பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு தீவுப்பகுதி மக்கள் பெருவரவேற்பு அளித்து வருகிறார்கள். தீவுப்பகுதியிலுள்ள ஒவ்வொருகிராமத்துக்கும் சென்று மக்களைச் சந்தித்து அரசியல் விளக்கமளித்து வருகிறார், திரு. கா. பொ. இரத்தினம். அண்மையில் அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்,

கட்டுப்பாட்டைமீறி தமிழரசுக்கட்சியின் முதுகில் குத்தி தீவுப்பகுதி மக்களின் கட்டளையைப் புறக்கணித்து புதுக்கட்சி அமைத்து தலைவராக எண்ணங்கொண்டுள்ள துரோகிகளுக்கு அடுத்த தோதலில் சரியானபாடம் கற்பிக்க தீவுப்பகுதி மக்கள் உறுதியுடன் இருக்கிறார்கள் என்பதை இக்கூட்டங்கள் ஊர்ஜிதப்படுத்தி வருகின்றன.

திரு. நவரத்தினத்தின் ஒத்துழைப்பின்மையால் தீவுப்பகுதியில் இயங்காமல் இதுவரை இருந்துவந்த தமிழரசுக்கிளைகள் எல்லாம் பண்டிதர் தலைமையில் சுறுசுறுப்புடன் இயங்க ஆரம்பித்துள்ளன.

"தமிழரசுக் கட்சியை அழித்துப் புதுக்கட்சி ஒன்றை நிறுவித் தமிழரின் தனிப பெருந் தலைவராகலாம் என்று மனப்பால் குடித்தவர்கள் இன்று துள்ளுகிறார்கள் துடிக்கிறார்கள் துவளுகிறார்கள். அரசியற் கட்சிகளின் உயிர்நிலை கட்டுப்பாடுதான் எனும் அரசியல் அரிச்சுவடி கூடத் தெரியாமல் மக்களை ஏமாற்ற முற்பட்டவர்கள் இன்று மூளை குழம்பிப் பிதற்றத் தொடங்கிவிட்டார்கள்; இவர்கள் இனித் தூற்றுவதையே தம் தொழிலாகக் கொள்ளுவார்கள். எனவே தமிழரசுக் கட்சியை அன்றும் இன்றும் ஆதரிக்கும் பண்பு மிக்க மக்கள் இந்த நேரத்தில் கருமமே கண்ணாக அமைதியாகச் செயலாற்ற வேண்டும்."

என்று கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் அல்லைப்பிட்டிக் கிளை அமைப்புக் கூட்டத்திற் பேசும்பொழுது குறிப்பிட்டார.

அல்லைப்பிட்டிக் கிராம சபைத் தலைவர் திரு. செ. தவவிநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாரந்தனைக் கிராமசபை உறுபபினா திரு. எஸ். பத்மநாதன் பேசும்பொழுது கூறியதாவது — பதின்மூன்று பேரைக் கொண்ட நாரந்தனைக் கிராமச் சபையின் கடைசிக் கூட்டத்திற்கு என்னுடன் ஐந்து உறுப்பினர்களே சமூகம் கொடுத்தனர். நாரந்தலைக் கிராமச்சபைத் தலைவர் திரு. ச. அருமைநாதர் தமிழரசுக் கட்சியின் அசையாத தூண். நான் தமிழரசுக் கட்சிக்காரன். திரு. நவரத்தினத்தின் கையாள் ஒருவர் போட்டியைத் தவிர்க்குமாறு திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்துக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலததுக்கும் கிராமசபையின் சார்பில் கடிதங்கள் எழுதவேண்டுமென்று கூறி ஒரு பிரேரணையைக் கொணடுவந்தார்.

"அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கும் நாரந்தனைக் கிராமசபைத் தலைவர் தெரிவில திரு. அருமைநாதர் போட்டியிடுகின்றார். இதனால் அவர் இந்தப் பிரேரணையை எதிர்க்கவில்லை. தமிழரசுக் கட்சியின் முன்னணித் தலைவரான திரு. அருமைநாதர் மீண்டும் கிராமச்சபைத் தலைவராக ஆவதற்குரிய வாய்ப்பைக் கெடுக்கக்கூடாதென்பதற்காக நானும் இந்த அர்த்தமற்ற செயற்படுத்தமுடியாத பிரேரணையை எதிர்க்கவில்லை.

ஆனால் திரு. நவரத்தினத்துக்குச் செல்வாக்குத் தேடுதற்காகச் செய்யப்பட்ட அரசியல் ஏமாற்று வித்தைதான் இது என்பதை இப்பிரேரணையைத் திரித்துப் பத்திரிகைகளில்வெளியிட்டதால் நன்கு தெரிகின்றது.

திரு. இரத்தினராசா திருஞானம். வே. இராசரத்தினம் முதலிய பலர் பேசினர்.

பின்வருவோர் தமிழரசுக் கட்சிக் கிளையின் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. பொ. நடராசா, செயலாளர்: திரு. நீ. சிங்கராசா, துணைச்செயலாளர்: திரு. வை. குணரத்தினம், பொருளாளர் திரு. செ திருநாவுக்கரசு 15 பேரைக் கொண்ட நிருவாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

### புங்குடுதீவில்

"ஒரு கட்சியின் முன்னணி உறுப்பினர்களில ஒருவராயிருப்பவர் அக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தமது கருத்தை ஏற்கா விட்டால் தமது தொண்டுகளாலும் கண்ணியத்தாலும் ஆற்றலினாலும் பெருமபான்மையினரைத் தம் கருத்தை ஏற்கச் செய்ய முயலல் வேணடும். இதனை விடுத்துக் கண்ணியமின்றிக் கட்சியின் கட்டுப்பாட்டைமீறக் கூடாது. கட்டுப்பாட்டை மீறுபவர்களைத் தக்கபடி தண்டிக்காமல் எந்தக் கட்சியும் மதிப்புடன் தொடர்ந்து வாழ முடியாது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் கட்சியினால் விலக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னை அநியாயமாக விலக்கிவிட்டார்கள் என்று கூறி மக்களை ஏமாற்ற முயல்பவர்கள் கோழைகளாவார்கள். இவர்கள் புதிய கட்சியை நிறுவ முயன்றாலும் அக்கட்சி உருப்படாது. அக்கட்சியிலும கருத்து வேறுபாடு உண்டா நாங்கள் பலவற்றை எதிர்த்தோம்; அப்பொழுதெல்லாம் எங்களுடன் சேர்ந்து எதிர்க்க அவர் முன்வரவில்லை நாங்கள் கட்சியை வளர்க்கும் நல் நோக்கத்துடன் எதிர்த்து வந்தோம். கட்டுப்பாட்டை மீறாமல் கும் பொழுது அக்கட்சியிலிருந்தும் இவர்கள் வெளியேறுவார்கள் அன்றேல் வெளியேற்றப் படுவார்கள். ஆட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தம்மை எதிர்த்தாலும் அஞ்சாமலும் அசையாமலும் கட்டுப்பாட்டை மீறாமலும் தொடர்ந்து பணிபுரிந்து பெரும்பான்மையினரைத் தம் பக்கம் திருப்ப முயல்பவர்களே மதிப்புள்ள பொறுமையுள்ள கண்ணியமுள்ள தலைவர்களாக முடியும்" என்று தமிழரசுக்கட்சியின் புங்குடுதீவுக் கிளையின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சிப் பா. உ. கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

கிளைத் தலைவர் வே. க. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மகேஸ்வரன் பேசிய பொழுது தமிழரசுக் கட்சியின் செயல்களை சிலவற்றைச் சுட்டிக்காட்டி விளக்கம் கோரினார். தமிழரசுக் கட்சியின் அமைப்புச் செயலாளர் திரு. சேனாதிராசா தம் பேச்சில் அவருக்கு அழுத்தந் திருத்தமாகப் பதிலிறுத்தாா.

மாவட்ட சபைச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு உணாச்சி மிக்க தம் பேச்சிலே பின்வருமாறு கூறினார்:

தமிழரசுக்கட்சியுடன் ஒட்டி இருந்து அக்கட்சி செய்தவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டவர் ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம். கட்சி மந்திரிப் பதவி ஏற்றதை நாங்கள் எதிர்த்து வாக்களித்த போது அதை ஆதரித்து வாக்களித்தவர் திரு. வ. நவரத்தினம். கல்முனை மாநாடு செய்த தீர்மானங்களை எவ்வித எதிர்ப்பும் தெரிவியாமல் அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் இன்று இல்லாதவற்றையும்பொல்லாத [illegible] கட்சியின் செயற்குழுக் கூட்டங்களிலும் [illegible]ாரிய சபைக் கூட்டங்களிலும் கண்ணியத்துடன் நடந்து கொண்டோம். ஆனால் திரு. நவரத்தினம் கட்டுப் பாட்டை மீறினார் விலக்கப்பட்டார். இப்பொழுது பச்சாத்தாபப் படுவதால் பயனில்லை தனி மனிதனிலும் கட்சியே பிரதானம். எனவே தான் நாம் கட்சியை ஆதரிக்கின்றோம்."

புங்குடுதீவுக் கிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோா தெரிவு செய்யப்பட்டனர்:-

### மண்டைதீவு கிளைக் கூட்டம்

மண்டைதீவுத் தமிழரசுக் கட்சிக் கிளையின் பொதுக் கூட்டம் அண்மையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் குழுமி வந்திருந்த இக்கூட்டத்தில் பண்டிதர் அவர்கள் இன்றைய அரசியல நிலையையும் தமிழரசுக்கட்சி செல்லும் பாதையையும் நவரத்தினத்தின் திருகுதாளங்களையும் எடுத்து விளக்கினார்;

அதன் பின், பின்வருவோர் புதிய உத்தியோகத

(6-ம் பக்கம் பார்க்க)

### அவருக்கு தெரிந்த சமயம்!

உரும்பராயில் நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டமொன்றில் திரு. பொன்னம்பலத்திடம் ஆலயப் பிரவேசம் பற்றிக் கருத்துக் கேட்டபொழுது, 'நான் சமயத்தையும் அரசியலையும கலக்க மாட்டேன்" என்று கூறித் தட்டிக் கழித்தாராம்.

திரு. பொன்னம்பலத்தின் இந்தப் பதிலை கோப்பாய் பா. உ., திரு. சி கதிரவேற்பிள்ளையிடம் ஓர் அன்பர் கூறியபோது அவர் சிரித்துக் கொண்டே நகைச்சுவையாகச் சொன்ன பதில் இது;-

"உண்மைதான். திரு. பொன்னம்பலத்தால் எப்படி அரசியலையும் சமயத்தையும் கலக்க முடியும்? சமயமும் தெரியாத; அரசியலும் தெரியாது. தெரியாத இரண்டையும் அவர் எப்படிக் கலக்க முடியும்? அவருக்குத் தெரிந்த சமயம் ஆக வேட்டி கட்டித் தேர் இழுப்பது மாத்திரமே."

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனை மனிதன் கைப்பற்றுவானு?

## 12 ஆண்டுகால விடாமுயற்சியின் பலன் இம்மாதம் புதிய சாதனையை விளைவிக்கும்!

### சந்திரனிலிறங்கும் மனிதன் திரும்பிவர முடியுமா என்பதே இன்றைய கேள்வி!

பழமையில் திளைத்தவர்களுக்குக் கடவுளாகவும், காதலர்களுக்குத் தூதுவனுகவும், கவிஞர்களுக்குத் தோழனுகவும், குழந்தைகளுக்கு மாமாகவும் இதுவரை விளங்கி வந்த சந்திரனில் மனிதர்கள் காலடி வைக்கப் போகிறார்கள்.

சந்திர மண்டலப் பயணத்துக்கென ஆரம்பித்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், இப்பொழுது சந்திரனுக்கு மனிதர்கள் சென்று, அதன் பரப்பில் இறங்கி, அங்குள்ள பொருட்களை விஞ்ஞான பரிசிலனைக்காகக் கொண்டு வரப்போகிறார்கள்.

பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கின்ற அளவுக்கு விஞ்ஞான வளர்ச்சி அமரிக்க நாட்டில் வளர்ந்து விட்டதை அகில உலகமும் பாற்றக் கடமைப் பட்டுள்ளது.

உலகுள்ள வரைக்கும் போற்றப் படக்கூடிய இந்தத் துணிகர முயற்சியில்— சந்திரனை அடையப் போகும் இப்பயணத்தில் மூவர் பங்கு கொள்ளுகின்றனர். இம் மூவரில் இருவர், பிரதானப் பயணக் கப்பலில் இருந்து 'லூனர் மோடுல்' எனப்படும் இன்னெரு வாகனத்தில் சந்திரனின் தளத்தை அடைய இருக்கிறார்கள். அப்படி இறங்கிய சிலமணி நேரத்தின் பின்னர், சந்திரனுக்கு மேலே காத்திருக்கும் பிரதானக் கப்பலில் உள்ள நண்பனை அடைவார்கள்.

கேப் கென டி நிலயத்திலிருந்து வெளிக் கிளம்பும் எட்டாவது நாள், திரும்பவும் அந் நிலையத்தை அடைவார்கள், இப்படி அமரிக்கானல் மேற்கொள்ளப்படும் சந்திர மண்டலப் பிரயாணக் கப்பலின் பெயர் "அப்பலோ 11" ஆகும்.

இம்மாதம் 16ந் திகதி ஐக்கிய அமரிக்காவைச் சேர்ந்த நெயில் ஏ. ஆம்ஸ்ரோங், மைக்கேல் கொல்லின்ஸ், எட்வின் ஈ. அல்ட்றின் ஆகிய மூவரும் ரொக்கெட் மூலம் அனுப்பப்படவிருக்கிறார்கள். மேலாக சூரிய வெளிச்சத்தைத் தாண்டி யாரும் அறியாத ஒரு புது இடத்துக்குப் போகவிருக்கிறார்கள்.

ஆம்ஸ்ரோங் அவர்களும், அல்ட்றின் அவர்களும் பிரதான விண்வெளிக் கப்பலில் இருந்து பிரிக்கப்பட்டு 'லூனர் மோடுல்' என்ற வாகனத்தில் சந்திரனின் தளத்தை அடைவார்கள். பதினைந்து மணிநேர ஓய்வுக்குப் பிறகு, விண்வெளிப் பயணத்தின் தளகர்த்தரான ஆம்ஸ்ரோங் அவர்கள் சந்திரனில் முதல் மனிதனுக இறங்குவார். சிறிது நேரம் கழித்து அல்ட்றின் அவர்களும் இறங்குவார்கள்.

இவர்கள் இருவரும் மட்டும் சந்திரனில் தனித்து இருந்தாலும், உலக மக்கள் இவர்கள் பேசுவதையும் செய்வதையும் கவனித்துக் கேட்டபடியே இருப்பார்கள். விண்வெளிப் பயணத்துக்கெனச் செய்யப்பட்ட கவச உடைகளுடன் சேர்ந்தே தயாரிக்கப்பட்ட ஒலி பெருக்கியும், பின்புற உடையிலும் சந்திரனையடையும் வாகனத்திலும் அமைக்கப்பட்டிருக்கும் ஒலி பரப்புக் கருவிகள் மூலமாகவும் அங்கு நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நேரடியாக வர்ணனை செய்வார்கள். அதனை உலக மக்கள் பார்க்கவும் கேட்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

உலக மக்கள் இக் காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கும் இதே நேரத்தில், சந்திர மண்டலப் பரப்பிலுள்ள பொருட்களையும், பாறைத் துண்டுகளையும் மெழுகுப்

நடமாடி'

பைகளிலும், பாத்திரங்களிலும் அவர்கள் சேர்ப்பார்கள். பின்னர் மூன்று விஞ்ஞானக் கருவிகளை சந்திர மண்டலப் பரப்பில் வைப்பார்கள். அவைகளில் ஒரு கருவி சந்திர நடுக்கம் பற்றிய விபரங்களை பூமிக்கு அனுப்பி வைக்கும்.

மற்றது ஒருவித கண்ணுடி. இது சந்திரனிலுள்ள கதிர்களை பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். இதனுல பூமியிலிருந்து சந்திரனுக்கு எவ்வளவு தூரம் என்பதை விஞ்ஞானிகள் சரியாகக் கணித்துவிட இயலும். மூன்ருவது கருவி காற்றே இல்லாத சந்திரனில் சூரியனின் பங்கு என்ன என்பதைச் சேர்த்து வைத்துக் கொள்ளும். இக்கருவியை விஞ்ஞானிகளின் பரிசோதனைக்காகப் பூமிக்குத் திருப்பிக் கொண்டு வருவார்கள்.

'சந்திர மண்டலத்தில் மனிதர் இறங்க வேண்டும், அந்த வெற்றியை அமரிக்க நாடே பெறவும் வேண்டும். என 1961ம் ஆண்டு அமரிக்க ஜனுதிபதி கென்னடி அவர்கள் விரும்பினுர்கள். அன்றிலிருந்து நான்கு இலட்ச தொழிலாளர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுனர்கள் என்போர் விண்வெளிப் பயணத்துக்கான ஆயத்தங்களில் இறங்கினுர்கள். அனுப்பப்பட வேண்டியவர்கள் பரீட்சைக்குள்ளானுர்கள்.

விண்வெளிப் பயணத்தின படிப்படியான முன்னேற்றத்தின பின்னர், இன்று வெற்றியின் உச்சத்தையடையக் காத்திருக்கிறது அமரிக்கா. 1961ம் ஆண்டிலிருந்து 1968ம் ஆண்டு வரையும் இருபத்தொரு விண்வெளிக் கப்பல்களைச் சந்திர மண்டலத்துக்கு அமரிக்கா அனுப்பியுள்ளது. இவைகளில் பதின்மூன்று சந்திரனைப் பற்றிய விபரங்கள கூறும் ஒரு இலட்சம் படங்களைக் கொண்டு வந்தன.

கடைசியாக, மே மாதம் விண்வெளிக்கு அப்பலோ 10ல் அனுப்பப்பட்டவர்கள் முப்பது முறை சந்திரனை வலம் வந்த பிறகு, சந்திரனுக்கு ஒன்பது மைல் தூரத்தில பிரதானக் கப்பலில இருந்து வேறொரு வாகனத்தில் இருவர் இறங்கி, மீண்டும் ஒன்று சேர்க்கப்பட்டுத திரும்பினர்.

இந்த உச்சக் கட்டத்தில் ஒரு கேள்வி பதில் காண முடியாதிருக்கிறது. மனிதர் சந்திர மண்டலத்தில் காலடி வைத்தபிறகு திரும்பவும் பூமிக்கு அவர்களால் வந்து சேர முடியுமா?

விண்வெளிப் பயணத்துக்காகப் பயிற்றப்பட்ட ஐம்பத்திரண்டு பேர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மூவரும 1930ம் ஆண்டு பிறந்தவர்கள். விவாகமாகித் தந்தையுமானவர்கள். இவர்களில இருவர் 'அப்பலோ 11ல்' இருந்து பிரிக்கப்பட்டு சந்திரனில் இறங்கப் போகிறார்கள.

கேள்விக்குப் பதில் 'ஆம்' என்று மாறினுல், உலகத்திலேயே ஒப்பு உவமை இல்லாத ஒரு பெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு இதுவென்பதாகும். மற்றைய கிரகங்களின் உண்மைகளை ஆராய்வதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட நற்செய்தியுமாகும்!

## நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கம்

நீர்கொழும் இந்து வாலிபர் சங்கத்தின் 38வது வருடாந்தப் பொதுக் கூட்டம், 7.5 69 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில், சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பெற்றனா காப்பாளர் செனட்டர் திரு. த. நிதிராசா ஜே. பி. எம். எம். சி. தலைவர் திரு. சி. சண்முகநாதன், உபதலைவர்கள், திரு. தா. சண்முகநாதன், திரு. ஜெயம் விஜயரத்தினம் எம். எம். சி. திரு. பொ. கந்தசாமி, பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம், துணைச் செயலாளர்; திரு ந. தெய்வேந்திரன், நிர்வாகச் செயலாளர்: திரு. ந. தியாகலிங்கம், உடற்பயிற்சிச் செயலாளர்: திரு. த. எதிர்மன்னசிங்கம், நூல்நிலையக் காப்பாளர்; திரு. சி. முருகையா, துணைப் பொருளாளர் திரு. விஸ்வநாதன். ஆட்சிமன்ற உறுப்பினர்கள். டாக்டர் திரு. சோ. பாலசுப்பிரமணியம் திரு. மு. கணேசபிள்ளை, திரு. ச. நடராசா, திரு. சி, நடராசா திரு க. வில்வநாதன், திரு. க. அருணுசலம், திரு. பொ வைரவநாதன், திரு. ஐ. பொன்னுத்துரை, திரு. கு. அழகையா, திரு. சோ. முருகேசு. திரு. ந. அம்பலவாணர், திரு சோ. நடராசா, திரு. க. சந்திரசேகரம், திரு. இ. பூபாலகுணசிங்கம்.

# பிரேமதாசா விஜயத்தின்போது திருமலை தொகுதியில் கறுப்புக்கொடி!

## மணமுறிவு கதை பேசி நம் தலைவர்களை இகழ்ந்தவருக்கு வரவேற்பு ஒரு கேடா?

### இளைஞர் எதிர்ப்பால் திரியாய் வரவேற்பு ரத்து!

உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா அண்மையில் திருமலைக்கு விஜயம் மேற்கொண்டபோது ஆங்காங்கே கறுப்புக் கொடிகள் வரவேற்பளித்தன.

பல இடங்களில் "தமிழினத்துக்கு எதிராக ஆட்சி புரியும் அமைச்சரே தமிழர் பிரதேசத்தில் உமக்கு வரவேற்பா? திரும்பிப் போங்கள்' என்பன போன்ற சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. திரியாய் பாடசாலை வீதியிலும், கட்டுக்குள வீதியிலும் பறந்துகொண்டிருந்த பென்னம்பெரிய கறுப்புக் கொடிகளை பொலீசாரே அவ்விடங்களிலிருந்து இறக்க வேண்டியதாயிற்று.

அண்மையில் உத்தியோக பூர்வமாக திருமலைக்கு வருகை தந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாசா திரியாயில் அமைந்திருக்கும் பௌத்த விகாரைக்கும் சென்றார். அதே தினத்தில் திரியாயில் ஓர் வரவேற்பளிக்க திரியாய் கிராம சபை உறுப்பினர்கள் ஏற்பாடுகளை மேற் கொண்டனர். ஆனல் கிராம இளைஞர்களின் பலத்த எதிர்ப்பின் காரணமாக இறுதியில் அவ்வரவேற்பு கைவிடப் பட்டது.

அமைச்சருக்கு அளிக்க இருந்த வரவேற்பை எதிர்த்து சுமார் அறுபது இளைஞர்கள் கைச்சாத்திட்டு கிராம சபை உறுப்பினர் திரு. க. பொன்னம்பலம் அவர்களிடம் அளித்த மகஜரொன்றில் "உதட்டளவில் தேசியம் பேசும்சிங்களவெறியர்களுக்கு எங்கிராமச்சபை வரவேற்பளிப்பதை விரும்பவில்லை. மணமுறிவுக் கதை மூலம் தமிழர்களின் தலைவர்களையும் கட்சியையும் தூற்றியவருக்கு நாம் ஏன் ஆலவட்டம் பிடிக்க வேண்டும்" என கேட்கப் பட்டிருந்தது.

இறுதியில் இரண்டு நிமிடம் தானும் திரியாயில் இறங்காமல் நேரே எந்தவித ஆடம்பரமுமின்றி சென்று திரும்பினர் அமைச்சர்.


அமைச்சரின் வருகை நாளன்று காலையில் திரியாய் பாடசாலை வீதியிலும் கட்டுக்குள வீதியிலும் கறுப்புச் கொடி பறந்தன. இறுதியில் பொலிசாரே அக் கொடிகளை இறக்கினர்.

## இடைப்பகுதியில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளர்: கா. பொ. இரத்தினம் பா. உ., தலைவர் திரு க. அமிர்தலிங்கம், பொதுச் செயலாளர் திரு. சி. தட்சிணுமூர்த்தி, பொருளாளர் திரு. வயிரமுண்டோ. 8 வட்டாரத்துக்கும் தலா 3 பேர் வீதம் 24 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 7 பேர் கிராமசபை உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத் தக்கது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தி. மு. கழகத்துள் கட்டுப்பாடின்மை அதிகரித்து வருகிறது!

## இந்நிலை நீடிக்கவிடுவது தமிழ்நாட்டுக்கே பேராபத்து!

## ம. பொ. சி. விடுக்கும் எச்சரிக்கை!

### கட்டுக்கோப்பை ஏற்படுத்த சிலம்புச்செல்வரின் யோசனைகள்

தி. மு. கழகம் தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளிலே ஒன்றுக மட்டும் இல்லை. ஆளுங் கட்சியாகவும் இருக்கின்றது: அத்துடன், தமிழர் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை - எளியவர்கள் கட்சியாகவும் இயங்கி வருகின்றது. அந்த மக்களுக்கு தி. மு. கழகம் அளித்துள்ள உறுதி மொழிகள் ஏராளம்! ஏராளம்! ஏராளம்! அவை நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கையில் எத்தனையோ சோதனைகளுக்கிடையேயும் கடந்த பொதுத்தேர்தலிலேயும் அதன் பின்வந்த இடைத் தேர்தல்களிலேயும் நகரமன்றங்களுக்கான தேர்தல்களிலேயும் ஏழை மக்கள் தி. மு. கழகத்தை உறுதியுடன் ஆதரித்து வந்துள்ளனர். அப்பாவித்தனமாக அல்ல: தங்கள் வாழ்க்கைத் தேவைகள் விரைவில வழங்கப்படுமென்ற நம்பிக்கையால்! இந்த நம்பிக்கை நிறைவேற வேண்டுமானால், தி. மு. கழகத் தோழர்கள் கடுமையான கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தாக வேண்டும். கட்டுப்பாடு குலைந்தால், அதற்கப்புறம் கட்சி நிலைக்க முடியாது.

பெருமைமிக்க வரலாற்றுப் படைத்த ஒரு அகில இந்தியக் கட்சிக்கு மாற்றுக் கட்சியாக வந்திருக்கிறது மாநில அளவில் விளங்கும் தி. மு. க. இதனால் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலகள் பல. அவற்றை இங்கு விவரிகக நாம் விரும்பவில்லை.

தமிழகத்திலே, காங்கிரஸ் கட்சி வலுவான ஒரு எதிர்க் சுட்சியாகக் கூட இருக்கவில்லை. மற்றுள்ள கட்சிகளும் தி. மு. கழகத்துடன் தோழமை கொண்டுள்ளன. இந்த நிலையில் ஆளுங் கட்சியில் கட்டுப்பாடின்மை வளருமானல், அதனல், தமிழ் நாட்டின் எதிர்காலம் இருளடைந்துவிடும். இப்போதைய ஆளுங்கட்சியிடம் என்னென்ன வெல்லாமோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள ஏழைமக்கள். அவர்கள் ஏமாற்றமடைந்தால் திரும்பவும் காங்கிரசுக்கு ஆதரவளிக்கமாட்டார்கள். அராஜகத்திற்குத் தான் அழைப்பு விடுவார்கள்.

நாசவேலையில் நம்பிக்கையுடைய—பார்லிமெண்டரி அரசியலில் நம்பிக்கை இழந்துவிட்ட — நக்சல்பாரிகள் தமிழ் நாட்டிலும் வலுத்து வருகின்றனர். தத்துவ ரீதியில் அவர்களோடு தொடர்புடைய கம்யூனிஸ்டுக்கட்சிகளின் நிலைமை தெளிவாகத் தெரியவில்லை. இந்தப் பயங்கரமான நிலையில் ஏழை மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே சின்னமாக விளங்கும்தி. மு. கழகத்திலே கட்டுப்பாடின்மைஅதிகரித்து வருவது நமக்குக்கவலையைத் தருகின்றது.

இன்றுள்ள நிலையில் இங்குமங்குமாகஒருசிலஇடங்களில் தான் தி. மு. கழகத்தினரிடையே கட்டுப் பாடின்மை வெளிப்பட்டிருக்கிறது. இதைமட்டுமே வைத்துக் கொண்டு பயந்து விடுவது கூடாதுதான். இதனை நாமும் அறிவோம். ஆயினும். தி. மு. கழகம் ஆளுங்கட்சியானதால், அதன் உறுப்பினர் களிடையே போட்டியும் பொறாமையும் தோன்றி, அவை வளருவதற்கு நிறைய வாய்ப்புண்டு. ஆகையால், நட்பு காரணமாக இப்போதே எச்சரிக்கை செய்வது அவசியமென்று கருதுகிறோம்.

தி. மு. கழகத்தினரை ஆக்கவழி வேலைகளில் கொண்டு செலுத்த அதன் முன்னணித் தலைவர்கள் திட்டமிடவேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட தனி நாடு தி. மு. கழகத்தின் கொள்கையாக இருந்தது. அத்தகைய ஒருநாட்டை அடைவதற்கு பயங்கரமான தியாகங்கள் செய்யவும் அந்தக் கழகத்தினா விரதங் கொண்டிருந்தனர். தற்போது, தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு, சுயாட்சித் தமிழகம் அடைவதனைக் கொள்கையாகக் கொண்டிருக்கின்றனர். சுதந்திரத் தமிழ் நாடு அடைவதற்கு எவ்வளவு கடுமையாகப் போராட வேண்டுமோ, எவ்வளவு தியாகம் செய்ய வேண்டுமோ, அவ்வளவு போராட்டமும் தியாகமும் சுயாட்சித் தமிழகம் அடையவும் தேவைப்படுகின்றன வென்பதனை மிகுந்த அன்புணர்ச்சியோடு தி. மு. கழகத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுயாட்சித் தமிழகம் அடைவதற்கான ஒரு பெரும் போராட்டத்திற்குத தி. மு. கழகத் தோழர்களைத் தயாரிப்பதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டு விட்டால், இப்போது இங்குமங்குமாகக் காணப்பட்டு வரும் கட்டுப்பாடின்மை விரையில் ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

தி. மு. கழகத்தின் ஆரம்ப கால இலட்சியமாக இருந்த சமுக சீர்திருத்தம் கொஞ்ச காலமாக பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதிகாரத்தில் இருக்கும் தி. மு. க. காலமாறுதலுக்கேற்ப தனது பழைய சமுக கொள்கைகளில் மாறுதல் கண்டு சமுக சீர்திருத்தங்களை செயல் படுத்த முன் வர வேண்டும்.

தமிழர் வாழ்விலே, எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறுவதற்கான வேலைத் திட்டமொன்றினை தி. மு. கழகத் தலைவர்கள் உருவாக்கவேண்டும்.

தேர்தல் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ள விஞ்ஞான ரீதியான சோசலிச சமுதாயம் படைப்பதற்கான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க தி. மு. கழகம் முயல வேண்டும்.

மாநில சுயாட்சியை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசினரைக் கோரும் தீர்மானத்தை நகர மன்றங்களில் நிறைவேற்றி, பிரதமரின் பார்வைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இந்தப் பணிகளுக்குத் தோழமைக் கட்சிகளின் ஒத்துழைப்பை தி. மு. கழகம் எதிர்பார்க்கலாம்.

இப்படி, அரசியல்-சமூகம் —மொழி— பொருளாதாரம் ஆகிய அனைத்திலும் ஒரு புதிய தமிழகத்தைப் படைப்பதற்கான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் முழுமையான அளவில் தயாரித்து. அதனை நடைமுறைக்கும் கொண்டுவரமுயன்றால், சமுதாயத்திலுள்ள பிற்போக்குச் சக்திகளுடன் கடுமையாகப் போராடியாக வேண்டிய அவசியம் தி. மு. கழகத்திற்கு ஏற்பட்டுவிடலாம். அதற்காக அஞ்சத் தேவையில்லை. அந்த நிலை தோன்றினால், தியாகத் தழும்பேறிய— இன்னல்களையெலாம் இன்பங்களாக ஏற்றுப் பழக்கமுடைய — தி. மு. கழகத் தோழர்கள் கட்டுப்பாட்டிலே நிலைத்துவிடுவார்கள். நிலைக்கச் செய்வதற்கு இதுதான் வழி. நாடு விடுதலை பெற்றபின்னர் காங்கிரஸ் கட்சியே இதனைச் செய்திருக்க வேண்டும். செய்யப் படுமென்றும் விடுதலைப் போராட்ட காலத்திலே காங்கிரசின் பெருந் தலைவர்கள் உறுதி கூறியிருந்தனர். அதிகார பீடத்திலேறிய பின்னர் அவர்களின் யாத்திரையிலே திசை மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதனுடைய தீய விளைவைத்தான் காங்கிரஸ் இப்போது அனுபவிக்கிறது. மகத்தான சாதனைகளையும் புனிதமான வரலாற்றையும் பெற்றிருந்த காரணத்தால், இவ்வளவு காலமேனும் வலிவோடு வாழ காங்கிரசால் முடிந்தது. தி. மு. கழகத்தின் நிலைமை அப்படி அல்ல. ஒரு மாநில அளவில் இயங்கும் அந்தக் கட்சியினர் காங்கிரசின் சமீப கால வீழ்ச்சியிலிருந்து சரியான பாடங்கள் கற்க வேண்டும்.

தமிழ் நாட்டின் நலனில் நமக்குள்ள அழுத்தமான பற்றுதலாலும் தி. மு. கழகத்திடம் நமக்குள்ள ஆழ்ந்த நட்புறவாலும் இவ்வளவு கூறினேம். தி. மு. கழகத் தலைவர்களும் தோழர்களும் நாம் கூறியவற்றை நல்லெண்ணத்துடன் ஆராய்வார்கள் என்று நம்புகின்றேம். ஆராயவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேம்.

## உங்களுக்கு தெரியுமா?

**'கருடன்'**

**கே**காலையிலுள்ள மகாவித்தியாலத்தின் அதிபரொருவர் சரஸ்வதி பூசைக்கென சேகரிக்கப்பட்ட உணவுப்பொருட்கள் பலவற்றை (அரிசி, சீனி, மிளகாய் ஆகியன) தனது சொந்தப்பாவனைக்குக் கொழும்புக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டாராம். இந்த இழி செயலினல் தமிழ் மக்கள் தலைகுனிந்து வெட்கப்பட வேண்டியிருப்பதாகவும் இந்த அதிபர் கொழும்பிலிருக்கும் பொழுது ஆடிய, பந்தம் பிடித்துப் பல்லிளிக்கும் நாடகத்தை அங்கும் செய்து வாமுற்படுகிருரென ஒரு ஆசிரியர் ஆத்திரத்துடன் கூறினர்.

**சி**ங்கள இனவெறி நிறுவனத்தின் ஊதுகுழலான புழுகுப் பதியின் ஆசிரியர் சமீபத்தில் வெளிநாடுசென்று திரும்பி வரும் பொழுது சிலஆயிரம் ரூபா பெறுமதியான தையல் மெஷினை விலைக்கு வாங்குவதற்குப் பணம் எப்படிக்கிடைத்தது? அதை எவ்வாறு சுங்கப்பகுதியினர் அனுமதித்தார்கள்? எனயன போன்ற கேள்விகள் தலைநகரில் கேட்கப்படுகின்றன.

சுங்கத்திணைகளத்தில் நான் இதுபற்றி ஆராய்ந்த பொழுது, மிகவும் வேடிக்கையான செய்தி கிடைத்தது. என்ன தெரியுமா?அந்தப் புழுகுணிப்பத்திரிகையில் அரசாங்கத்தைப் புகழ்ந்து எழுதுவதாகவும் தமிழரசுக்கட்சியைக் குலைப்பதற்குட பிரசாரம் செய்வதாகவும் அந்த நெட்டைநரி உறுதிகூறி ஒரு அமைச்சரின் காலில் விழுந்து வணங்கியதினல் அந்த மெஷினை வெளியில் எடுத்து வருவதற்கு உதவி செய்து கொடுக்கப்பட்டதாம்.

**ஒரு** உதவி அமைச்சரின் சகோதரன் பல ஆயிரக் கணக்கான புகைப்படம் பிடிக்கும் பிலிம்களுக்கு அவர் ஆஸ்பத்திரியொன்றில் புகைப்படக்காரராகக் கடமை பார்த்த பொழுது, கணக்குக் காட்டவில்லையாம். இவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குச் சுகாதாரத்திணைக்களம் பயப்படுகின்றதாம்.

**ஆ**றுமுகநாவலர் சபையில் பதவிப் போட்டி தலைதூக்கியுள்ளதால் இரண்டு உதவிச்செயலாளர்கள் பத்திரிகை ஆசிரியர்களின் வீடுகளுக்கு இரகசியமாகச் சென்று தரிசிக்கின்றுர்களாம்! ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராம். மற்றவர் சுங்கத்தில் சூத்திரமாகச் சுரண்டுபவராம். நாவலர் வழியனுப்பு விழாக் கூட்டம் நடைபெற்ற சரஸ்வதி மண்டபத்தின் மேடைப்பக்கம் சுங்கத்துக்காரரைத் தலைகாட்டாதவாறு குழிபறித்து விட்டாராம் கம்யூனிஸ்ட் குஞ்சு.

நாவலர் சிலையின் புகைப்படம், முதன் முதலில், ஒரு தமிழ்த் தினசரிப் பத்திரிகையில் மட்டும் பிரசுரமாவதற்கு. இந்த சிவப்புக் குஞ்சும் புகைப்படப்பிடிப்பாளரும் உடந்தையாக இருந்தார்களாம். இந்த வல்லமை வீரகேசரி தினகரனுக்கில்லையாம்.

கறுப்பு சிவப்பு மலர்களால் கட்டப்பட்ட மாலைகளும் மஞ்சள், சிவப்பு பச்சை நிறத்தில் கட்டப்பட்ட மாலைகளும் நாவலர் சிலைக்குப்போடவிடக்கூடாதெனக் குஞ்சு கட்டளையிட்டதாம்.

சந்தாப் பணம் ஒரு சதமும் செலுத்தாமல் நாவலர் சபையில் முக்கிய பதவிகள் வகிக்கின்றுர்களாம் சிலர்.

**யா**ழ்ப்பாணத்திலுள்ளதேசியவீடமைப்புத்திணைக்களத்தை முறைப்படி இயங்கவிடாது தடுத்து வைத்துள்ளராம், ஒரு உதவி ஆணையாளர். ஏனெனில், அவர் மாதம். இரண்டு முறை அங்கு சென்று வந்து பிரயாணப்படிகள் எடுப்பதற்காம். அத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து கடன் எடுத்தவர்கள் அனுப்பும் காசோலைகள், காசுககட்டளைகளை அவர்களது கணக்கு ...ாம் .பற்றுச் சீட்டும் அனுப்பாமலும் இருந்து விடுவார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றி தலைவர்களால் தமிழினம் அழியும்!

## நிர்வாகத்தில் தமிழுக்கு இடமிருந்தும் தமிழ் ஊழியர் வேலையிழப்பதுதான் நீதியா?

## அரசு நிதானம் தவறி நடந்தால் வெறுப்பு எழுச்சியாக உருவெடுக்கும்!

## புதிய ஊழியர் பிரச்சினையில் நியாயம் வேண்டும்

எமது சமுதாயத்தில் ஒற்றுமை, கட்டுப்பாடு இல்லாத காரணத்தினாலும் தான்தோன்றித் தலைவர்கள் நாளாந்தம் முளைத்துக் கொண்டு மக்களை ஏமாற்ற என்னுங் காரணத்தினாலும் நாம் ஒரு உறுதியான, தகுந்த கொள்கைகளுக்கமைய எம்மை வழி நடத்த முடியாதிருக்கிறது.

இந்த மந்த நிலையாலும், எம்மை வழிநடத்திச் செல்ல முடியாத நிலையிலும்தான் தமிழ் அரசாங்க ஊழியர்கள் நிலை நாளாந்தம் பரபரப்பை யூட்டுவதாக அமைகிறது.

சிங்களம் மாத்திரம் என்னும் சட்டத்தை அமுல் நடத்தும்விதத்தில் அரசாங்கத்தின் குறுகிய மனிதாபிமான மற்ற நடவடிக்கைகளினால் அரசாங்க சேவையில் உள்ள எத்தனையோ தமிழ்ப் பேசும் ஊழியரது உத்தியோகங்கள் பதவிகள் நாளாந்தம் பறிபோய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலை நாளை எமக்கும் வரலாம்.

எமது சமுதாய ஒற்றுமையின்மையின் காரணமாக இன்னும் எத்தனையோ எதிர்பாராத இன்னல்கள், தண்டனைகள் நாம் படவேண்டித்தான் இருக்கிறது.

இந்நாட்டு நிர்வாகத்தில் தமிழுக்கு உரிய இடம் இருந்தும் அதனை பயன்படுத்தும் கணிசமான மக்கள் தொகை இருந்தும், சிங்களம் தெரியாத காரணத்தினால், 3 வருடத்தில் சிங்கள தேர்வுக்கு தோன்றி திறமையாக சித்தியடையாத காரணத்தினால் ஒரு தமிழ் அரசாங்க ஊழியர் தனது உத்தியோகத்தை பறிகொடுத்து அவர்-தன் குடும்பம் நடுத்தெருவில் விடப்பட்டால் இவற்றில் எந்தளவு நீதி இருக்கிறது என சிந்தித்துப்பாருங்கள். மனிதாபிமானம் என்றளவிலாவது கருணையிருக்கிறதா என கேட்க விரும்புகிறோம்.

இந்த நிலை நீடிக்குமானால் சிங்கள சட்டதிட்டத்துக்கு விதிவிலக்காக இருக்கும்பழைய ஊழியர்கள் கூடநாளை இன்னொரு திறைசேரி அறிக்கையினால் வெளியேற்றப்படக் கூடியதான நிலை உருவாக்கப்படும் என எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

எமது ஒற்றுமையீனத்தையும் குறிப்பாக எமக்குள் இருக்கும் சாதி சமயப் பாகுபாடுகளையும் பயன்படுத்தி அரசியலார் எம்மை இக்கதிக்குள்ளாக்குகிறார்கள் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்ளுவீர்கள்.

புதிய ஊழியர்கள் நிலையில் ஓரளவு நியாயமான முறையை அமுல் நடத்துவதே, சிறப்பு. நதி. தமிழர்களும் இந்நாட்டு மக்கள்தான் என்பதையாவது நாம் உணரக் கூடியதாக இருக்கும். அதை விடுத்து, திறைசேரி சுற்றுநிருபங்களை திட்டவட்டமாகஅமுல் நடத்துவதாலோ அல்லது அரசாங்க இலாகாக்களிலுள்ள வகுப்புவாதிகளின் கண்ணோட்டங்களுக்கென்றும் ஆளாக்கி நிர்க்கதியாக்கிவிடுவதாலோ நிலைமாறும் என எண்ணவேண்டாம் என அரசியலாருக்கு உங்கள் சார்பாக சொல்லி வைக்க விரும்புகிறேன்.

எவ்வளவுக்கு அடக்குமுறையும் மனிதாபிமானமற்றசெயலும் கைக்கொள்ளப்படுகிறதோ எவ்வளவுக்கு எமது மனம் சோதனையடைந்து வெறுப்பு எழுச்சி ஏற்பட வழிவகுக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆதலால் திரும்பவும் அரசியலாருக்கு உங்கள் சார்பாக நான் விடுக்கும் கோரிக்கை என்னவென்றால், தானத்தில் சிறந்தது நிதானம். நிதானம் இனறேல் சமாதானம் இல்லை. சமாதானத்தால் நாட்டமுடையவர்கள் ஒருபோதும் நிதானத்தை இழக்கக்கூடாது என்பதே. எங்களையும் வாழவிடுங்கள் என்பதைதயை வலியுறுத்துகிறேன்.

(அண்மையில் நடந்த அஞ்சல் எழுதுவினைஞர் சங்க ஆண்டுக்கூட்டத்தில் ஆற்றிய தலைமையுரை)

இ. அந்தோனிப்பிள்ளை
தலைவர்: அ. ஏ. வி. சங்கம்




அன்புள்ள தம்பி தங்கைகளே,

வணக்கம். எங்கே அக்கா இவ்வளவு காலமும் காணோம்? மாணவர் அரங்கு ஏன் இடம்பெறவில்லையென்று கேட்பீர்கள். என்ன செய்வது? ஆசிரியர் இவ்வாரம் தானே இடம் ஒதுக்கித்தந்தார்!

இனி அடிக்கடி மாணவர் அரங்கு இடம் பெறப் போகிறது. மகிழ்ச்சிதானே! எனவே இனி கவலையின்றி நிறைய எழுதுங்கள். அடிக்கடி சந்திப்போம்.

விஜயா அக்கா

## நம்பிக்கை

மாணவர்களாகிய நாங்கள் எப்போதும் நம்பிக்கை என்னும் கொடியின் கீழ் வாழவேண்டும். நான் இவ்வருடம் பரீட்சையில் சித்தி அடைவேன் என்ற நம்பிக்கை பிறக்கிறது அது போன்று சித்தி அடைகிறோம். ஆண்டு தேர்வில் எடுத்த மதிப்பெண்ணைவிட அரையாண்டுத் தேர்வில் அதிக எண் எடுப்பதாக மதிப்புகொள்கின்றோம். ஆசிரியர்களும் இவ்வருட தேர்வில் இத்தனை சதவீதம் தேறியுள்ளார்கள் அடுத்த ஆண்டு இதனினும் அதிகம் தேறுவார்கள் என்ற நம்பிக்கையில் இன்னும் அதிக முயற்சி எடுத்துக் கற்றுக்கொடுக்கின்றார்கள்வாதியும் பிரதிவாதியும் தம் தம் பக்கங்கள்தான் வெற்றிபெறப் போகிறது என்ற நம்பிக்கையில்தான் தனித்தனி வக்கீலை நாடுகின்றார்கள். எதற்கு மூலகாரணமாக விருப்பது நம்பிக்கை எனும் திறவுகோல்.

கோம்ஸ் எனும் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார் "ஒருபோதும் எடுத்த காரியத்தை கைவிடாதே. எத்தனையோ சந்தர்ப்பங்கள்—திருப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அவைகள் அவைக்கு முனைபவர்களுக்கு நிச்சயம் உதவி செய்யும். பெரிய நெருக்கடிக்கிடையேதான் வெற்றிக்கான வழியும் பிறக்கும். எனவே மனம் தளராதே தைரியத்தைக் கைவிடாதே. துன்பமும் இன்பமும் உலக இயல்பே. அதை உணர்ந்து எவனொருவன் செயலாற்றுகிறானோ அவனே வெற்றி பெறுவான்" என்றார் அவர். எங்கள் சிந்தனையில நம்பிக்கையின்உரம் பாயவேண்டும் எங்கள் மனதிலே அந்த நம்பிக்கை ஆழப் பதிந்து அசைக்க முடியாதபடி நிலைக்க வேண் இவற்றாலே தான் எமது வாழ்க்கையில வெற்றி பெறலாம்.

திருமலை.

—புரட்சிவண்ணன்

## பல்லுக்குக் காதுண்டா?

(செய்துபாருங்கள்)

தேவையான பொருட்கள்:- மேசைக்கடிகாரம், சுத்தமானகைத்தடி.

செய்யும் முறை:- கடிகாரத்தை மேசைமீது அன்றேல் திண்ணைமீது வையுங்கள் கடிகாரத்திலிருந்து கோலினது தூரமளவு சென்று அவ்விடத்திலிருந்து கடிகாரத்தின் "ரிக்," "ரிச்" என்ற வொலி கேட்கிறதா வெனப் பாருங்கள். ஒலி கேட்குமாயின் கோலைப் பெரிய கோலாக எடுங்கள். கடிகாரத்தினொலி கேட்காததூரத்திலிருந்து கோலினது ஓர் முனையை பல்லினால் கடித்துக் கொண்டு மறு முனையைக் கடிகாரத்தைத் தொடும் படி விட்டு விட்டு, உங்கள் காதுகளைச் சுட்டுவிரல்களினால் அடைத்து, கண்ணை மூடிக்கொண்டு உற்றுக் கவனியுங்கள். கடிகாரத்தின் ஒலி கேட்கிறதா? இதற்குக் காரணமியாது? கடிகாரத்தினொலி காற்றில் பரவுவதைவிட கோலினூடு இலகுவாகப் பரவுகிறது. பரவும் ஒலி பல்லுக்கும், பல்லிருந்து தாடை. எலும்புக்கும் பரவுகிறது. இதனாலேயே கடிகாரத்தின் ஒலி கேட்கிறது.

அ. அன்ரனிக்கிறிஸ்ரி
சம். பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## கடலும் நதியும்!

நிமிர்ந்து வான் முகத்தைப் பார்த்தது மலைமுகடு! கண்சிமிட்டும்நேரம்-! மலை முகத்தைக் குனிந்து பார்த்த வானரசனின் மெய் சிலிர்த்தது. செருக்குடன் மதர்த்து நின்றாலும் அவள் தன் காதல் மனையாள் என்ற எண்ணம் தோன்றியதும கண்களில் காதல் ஒளி பிரகாசித்தது. ஆனாலும், மலைக் காதலியின் செருக்கை நினைந்து—அது பின் துணிந்ததை நினைத்து 'இடி இடி' என் அட்டகாசமாகச் சிரித்தான். அவனின் தேன் முகத் தங்கஒளெனத் தோற்றிய சீதளக் காற்று மலைக் காதலியை மெல்லத் தழுவி—

காதலனின் அன்பு அணைப்பில் மலைக் காதலிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தாள். 'நதி' என அழகு பெயர் சூட்டி அன்புடன் அவளைத் தன் மடியில் இருத்தி—காற்றைத் தொட்டிலாக்கி—இனிய வேய்ங்குழல் நாதத்தால் தாலாட்டி—இரவில், பகலில்—இமைப் பொழுதில்—இதமாய்க் குழந்தையைக் காத்து வளர்த்தாள் மலைத் தாய்.

தெள்ளு நடை போட்டு மெல்ல வளர்ந்த—நதிக் குழந்தை செந்தமிழின் விரைவு வளர்ச்சி பெற்று குமாரியானாள். அவளின் அழகு...? அம்மம்மா—! மலைத் தாயின் மடியில் தெள்ளு நடை போட்ட நதிக் குமரி மெதுவாய்த் தாயின் மடியிலிருந்து எழுந்தாள்.

குழந்தை நடை—தெள்ளு நடையை மறந்து கவிதை நடையைப் பயின்ற அவளின் கொள்ளை அழகில் மயங்கி, மலர்கள்—இதழ்கள்—தேன் துளிகள் இன்னும் எத்தனையோ - அன்பு முகம் காட்டி—ஆசைக்கரம் நீட்டி அவளை அழைத்தன.

ஆனால் — நதிக்குமரியின் நடை நிற்கும், தனரவில்லை— [illegible] அவள் [illegible] நடை கண்டு [illegible] [illegible] திறந்து மாற்றினர். ஆனால்—நிற்கவில்லை- நிலைக்கவில்லை. அவள் ஓடினாள். அவள் எங்கே ஓடுகிறாள் என்று அதிசயித்த ஜீவராசிகளை எல்லாம் வியப்பில் ஆழ்த்தி—ஓடினாள்— ஓடிச்சலந்தாள்—

தனக்குப் புறம் காட்டி ஓடும் உவர்க்கடலுள்!

தன்மீது அன்பு செலுத்தாது—திரும்பியும்பாராது செல்லும் கடலரசன் மீது உயிரன்பு வைத்துத் தவிக்கும் நதிக் குமரியின் செயலைக் கண்டு வியந்தனர் மக்கள்—!

அழகழகான மலர்களும் தோப்புகளும் ஆசையாக அழைத்த போது புறங்காட்டி ஓடும் உவர்க்கடலை—நதிக்குமரி தழுவியமும் செய்தியைச் சொல்லிச் பரிகசித்தனர்—!

'அத்...தா...ன்... 'என்று' ஊய்ங்காரக் குரலிட்டு அழைக்கும் அவளின் அழைப்பை ஏற்று நிற்காது—திரும்பியும் பாராது ஓடும் கடலுள் சங்கமித்து—'காதற்கீதம்' இசைக்கும் அவளைப் பார்த்துச் சிரித்தன—ஜீவராசிகளெல்லாம்!

இதைக் கண்ணுற்ற கடலரசனும்—நதிக்குமரியும் கூடச் நகைத்தன—!

ஜீவராசிகளுள் எல்லாம் 'உயர்ந்தவன்' என்று கூறிக் கொள்ளும் மனித ராசிக்குக் 'காதல் என்றால் என்ன?' அதன் 'உயர்வு' என்ன?' என்று தெரியாமல்—காதற் கதைகளையும் — கவிதைகளையும் புனையும் பூவுலக வாசிகளைப் பார்த்து—

அழகு நதியைத் தன்னுள் அடக்கிய கடலும்—உவர்க் கடலானாலும் தன் 'காதற்தலைவன்' அவனே என்று அவனுள் ஒன்றி விட்ட அழகு நதியும் கலகல சல சல என பேரிரைச்சலிட்டு—அலைக்கரந்தட்டி ஆர்ப்பரித்தன!

செல்வி ந. சற்குணதேவி,
சித்தங்கேணி.

## கைகட்டி வாழாதே!

கன்னல் மொழித் தமிழா நீ கைகட்டி வாழாதே!
அன்னை சொன்ன சொல்லை நீ அவமதித்துத் தள்ளாதே!
முன்பு வாழ்ந்த மூவேந்தர், முயற்சியினைக் கண்டனையோ?
இன்று வாழும் உனக்கு நான் சொல்வதிந்த உண்மையே!

பெற்றெடுத்த அன்னையின் பெரும்பழியைக் கேட்டின்நீ,
உற்ற உந்தன் உயிரையும் உதறிட்டு வருவாயே!
இற்றைவரை வாழ்ந்த தமிழ், அன்னியனின் வன்மையால்
குற்றுயிராய்க் கிடப்பதைக், கண்டுநீயும் என் செய்தாய்?

கட்டழகுக் காளையரே கடமையினை மறவாதீர்!
எட்டி வரும் எதிரி உந்தன் உடமையினை மாட்டுமின்றித்
தொட்டு நின்று பேசிடும் தூய தமிழ் மொழியதனைப்
பூட்டி வைத்துச் சிறைப்பிடித்துப் படுகுழியில் தள்ளிடுவாய்!

தட்டி உங்கள் தோளையே வீரமுடன் வாருங்கள்!
வட்டு போட்டு முதலுடன் அன்னைமொழி தமிழையே
அடக்கும் புகழ்ப்பாப்பி அகிலமெங்கும் ஏற்றுவோம்!
துட்டர்களை அடக்கவே துடிப்புடனே நீ ஓடிவா!

—வல்வை ந. ஆனந்தராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப்போராடுவோம்!

## நாவலரின் திருவுருவம் அந்த உறுதியைத் தரட்டும்!

### சிலை திறப்புவிழாவில் நல்லூர் எம்.பி. முழக்கம்!

ஆறுமுக நாவலர் காலத்தில் எப்படி ஆங்கில ஏகாதிபத்தியத்தால் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆபத்து ஏற்பட்டிருந்ததோ, அதை விட கடுமையான ஆபத்து இன்று பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தால் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்ப் பிள்ளைகள் மீது சிங்களத்தை திணிக்கவும் சைவப் பிள்ளைகளை பௌத்தர்களாக்கவும் திட்டமிட்டசதிமுயற்சி நடைபெற்று வருகிறது இந்தச் சதி முயற்சியை முறியடிக்க ஆறுமுக நாவலர் பெயரால் நாம் ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும்,'

—இவ்வாறு நல்லூரில் நடைபெற்ற தவத்திரு.ஆறுமுக நாவலர் சிலைத்திறப்பு விழாவில் பேசியநல்லூர் பா. உ. டாக்டர் இ. மு. வி. நாகநாதன் குறிப்பிட்டார்.

டாக்டர் நாகநாதன் மேலும் தமதுபேச்சில் கூறியதாவது:—

ஆறுமுகநாவலர் தமிழினத்துக்குவீரத்தையும் நம்பிக்கையையும் ஊட்டிய ஒரு வீரர். வெள்ளையர்களுக்கு அஞ்சியும் கெஞ்சியும் வாழ்ந்த தமிழ் மக்களிடம் அன்று விடுதலை உணர்ச்சியை யூட்டி வளர்தத விடுதலை வீரர் ஆறுமுகநாவலர்.

அன்றுநாவலர் பெருமான் காப்பாற்றிய சைவ சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் இன்று பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தால் பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆபத்திலிருந்து தமிழினத்தை காக்க ஆறுமுக நாவலர் பெயரால் தமிழர் ஒவ்வொருவரும் சபதம் எடுக்கவேண்டும்'

திரு சி. மூ. இராசமாணிகம் பா. உ' கூறியதாவது:—

நாவலர் சிலை கிழக்குமாகாணத்துக்கு எடுத்துவரப் படாததையிட்டு வருந்துகிறேன். நாவலர் தனியே வடமாகாணதுக்கு மட்டும் உரிய வரல்லர். இலங்கை முழுவதற்குமே உரியவர்.

"நாவலர் சபை, வடக்கே மட்டும் சைவர்கள் இருப்பதாகக் கருதக் கூடாது. கிழக்கிலும் மலைநாட்டிலும் பெருந்தொகையான சைவத் தமிழர்கள் வாழுகிறார்கள். கிழக்கிலங்கை மக்கள் சார்பில் நாவலர் பெருமானுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

நாவலரிடம் காணப்பட்ட வீரம், இன்று ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்பட வேண்டும். சாதியை ஒழித்துக்கட்டி, சைவத்தையும் தமிழையும் இந்நாட்டில் காப்பாற்ற வேண்டும்.''

---

## கதிர்காமத்திற்கு விசேடபஸ்சேவை

கதிர்காமம் திருவிழாவிற்கு யாத்திரிகர் குழு ஒன்று கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்று 24—7—69 இல் திரும்பி வரவிருக்கிறது.

டஸ் கட்டணம் ஒரு நபருக்கு ரூபா 20/—என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் திரு. ஆ. இராசரட்னம் 271 செட்டியார் தெரு, கொழும்பு-11 (தொலைபேசி 32540) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு, பணத்தைச் செலுத்தி ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுளனது.

—

## தமிழர்களுக்கு ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் திரு. சீ. சிறில் மத்தியூ நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்கட்சியின் தமிழ் ஒழிப்புக் கொள்கைகள் வருமாறு:-

சிங்களம்மாத்திர மே இலங்கையின் ஆட்சிமொழியாகக் கருதல் வேண்டும. தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் கடிதத் தொடர்புகளுடன தமிழ் மொழி பெயர்ப்புக் கொடுக்கப்படவேண்டும்.

1966, ஜனவரி 8ம் திகதி யன்று நிறை வேற்றப்பட்ட தமிழ் மொழிச் சட்ட விதிகள் உடன் ரத்து செய்யப்படல் வேண்டும்.

1969, பெப்ரவரி 28ம் திகதி உத்தியோக மொழிச் சட்டம் சம்பந்தமாக அனுப்பப்பட்ட திறைசேரிச் சுற்று நிருபம் வாபஸ்பெறப்படல் வேண்டும்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுலை நிறுத்த வேண்டும். இனிமேல் 1975 பொதுத் தேர்தலில் பெருந்தொகைத் தமிழர்கள் எம். பி.க்களாகக் தெரிவு செய்யப்படலாம்.

பிரஜா உரிமை வழங்கும் போது அவர்கள் சிங்கள மக்களின் மொழி கலாசாரம் என்பன வற்றை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளத் தயாராயுள்ளனர் என்பது பற்றி ஆராயப்படல்வேண்டும்'

இன மத உணர்ச்சிகளைத் தூண்டுவதும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுமான சகல புத்தகங்கள், சஞ்சிகைகள், சினிமாக்களைத் தடை செய்ய வேண்டும்!

## ஜீ. ஜீ. அரசிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலம் அரசியலிலிருந்து வெளியேறுவது தவிர வேறுமார்க்கமில்லை

''அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் திரு. பொன்னம்பலம் அரசியலிலிருந்து விரட்டியடிக்கப் படுவது நிச்சயமாகி விட்டது. அத்தகைய நிலை அவருக்கு ஏற்பட முன்னர் மேலும் காத்திருக்காது சுவாமிகளின் ஆலோசனைப் படி அரசியலை விட்டு உடனடிவாக வெளியேறி விடுவது அவருக்கும் தமிழினத்துக்கும் நல்லது.''

—இவ்வாறு கொழும்பில் வசிக்கும் பிரபல இந்துவும் பழம் பெரும் அரசியல்வாதியுமான தமிழ் பிரமுகர் ஒருவர் சுதந்திரன நிருபரிடம் தெரிவித்தார்.

மதுரை குருமகாசன்னிதானம் தவத்திரு. சோமசுந்தர சுவாமிகள் திரு. பொன்னம்பலம் அரசியலைவிட்டு வெளியேறி சமயப்பணி ஆற்ற முன்வரவேண்டுமென வேண்டுகோள் விடுத்திருப்பதாக வெளிவந்த செய்தி குறித்து கேட்டபோதே மேற்கண்டவாறு கூறிய அப்பிரமுகர் மேலும் கூறியதாவது:-

"திரு. பொன்னம்பலத்துக்கு அரசியல் இனித தேவையில்லையென்பதை திருவருட்கண் கொண்டுணர்ந்தே அடிகளார் இப்படிக் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன். சுவாமிகள் வாக்கு ஒரு போதும் பொய்க்காது. அரசியலிலிருந்து 1970 ம் ஆண்டுத்தேர்தலுடன் திரு. பொன்னம்பலம் விரட்டியடிக்கப்படவிருப்பதை தம்முடைய ஞான திருஷ்டியால் சுவாமிகள் ஒருவேளை உணர்ந்தே, அரசியலை விட்டு வெளியேறி சமயப்பணியாற்ற வரும்படி அழைத்திருக்கலாம்!

''திரு. பொன்னம்பலம் தமிழினத்துக்கு தமது வாழ்நாளில் செய்யக்கூடிய ஒரே ஒரு பெரிய நன்மை சுவாமிகளின் புத்திமதியைக் கேட்டு அரசியலுக்கு முழுக்குப் போடுவதுதான். அவர் தாமாகவே விட்டு விலகாவிட்டாலும், 1970 ம் ஆண்டுத் தேர்தலில மக்கள் அவரை அரசியல் பாலைவனத்துக்கு அனுப்பிவிடப் போவது சர்வ நிச்சயம்''

2வது நாள் நாவலர் மாநாட்டுக்கு தலைமை வகித்துப் பேசிய போது மதுரை ஆதீனத்தின் குருமகா சன்னிதானம் சோமசுந்தர சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

'கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று திரு. பொன்னம்பலத்தை சந்தித்தேன். அப்போது அவரிடம், அரசியலைத் துறந்து விட்டு என்னுடன் சேர்ந்து இந்து சமயத்தைப் பரப்பும் பணியுல் ஈடுபட வருமாறு அழைத்தேன்'

'போதியளவு பணத்தையும், புகழையும் சம்பாதித்துவிட்டீர்கள், ஆகவே இனி அரசியலைத்துறந்து என்னுடன் சேர்ந்து சடவுளுக்கு தொண்டாற்ற வருமாறு திரு. பொன்னம்பலத்திடம் கோரிக்கை விடுத்தேன்.

'அதற்குத் திரு. பொன்னம்பலம் ... சுவாமிகள் ... கொஞ்சக்காலம் பொறுத்துக் கொள்ளுங்கள்'

## புதுக்கட்சி...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கத்தை மறைந்துவிட முடியாதென்பதை திரு. நவரத்தினம் உணர வேண்டும். புதுக் கட்சியைக் காட்டி மக்களைப் பேய்க்காட்டவும் முடியாது.

20 ஆண்டு வரலாற்றையுடைய மிகப் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சிக்குள் இருந்த போதே கட்டுப்பாடாக இருந்து இனத்துக்கு முன்மாதிரி காட்டமுடியாத திரு. நவரத்தினம், தாம் அமைக்கப் போகும் புதுக் கட்சியில் மட்டும் கட்டுப்பாடாக இருப்பாரென்பது என்ன நிச்சயம்?

துரோகிகள் அமைக்கும் கட்சிகள் ஒரு போதுமே உருப்பட்டதாக வரலாறு கிடையாது. தி. மு. கழகத்துக்கும் அண்ணாவுக்கும துரோகியாக மாறி தனிக் கட்சியாக தமிழ் தேசியக் கட்சியை அமைத்தனர் சம்பத்தும் கண்ணதாசனும். இன்று தமிழ் தேசியக் கட்சி போன இடம் தெரியவில்லை. சம்பத்தும் கண்ணதாசனும் இருக்குமிடமும் தெரியவில்லை.

சம்பத்துக்கும் தமிழ் தேசியக் கட்சிக்கும் ஏற்பட்ட அதே கதிதான் திரு. நவரத்தினத்துக்கும், அவர் அமைக்கவிருக்கும் கட்சிக்கும் ஏற்படப் போகிறது என்பதை இப்போதே கூறிவைக்க விரும்புகிறோம்.

இறுதியாக ஒன்று—தமது கட்சிக்கு என்ன பெயர் வைக்கலாம் எனத் திரு. நவரத்தினம் ஆலோசித்து வருகிறாராம். நாம் பின்வரும் பெயரை சூட்ட விரும்புகிறோம். திரு. நவரத்தினத்தின் புதுக் கட்சியை 'துரோகக் கட்சி' என்று அழைக்கலாம்!

## இந்துக்களை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத்தில் பேசி தனது வெறியுணர்வையும் காட்டிச் சென்று விட்டார்.''

—ஜூன் 29-ம் திகதி நல்லூரில் நாவலர் சிலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட மக்களிடையே மேற்கண்ட கேள்விகள் எழுந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது

நாவலர் பெருமானுக்கு இத்தகைய போலி முகஸ்துதிகள் தேவையில்லையென்றும், போலி முகஸ்துதியை நாவலர் ஐயா நஞ்சென வெறுத்தவர் என்றும் நாவலர் சபையில் இருக்கும் ஒரு சிலர் தமிழையும் சைவத்தையும் விழுங்கி ஏப்பமிடத் துடிக்கும் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய வாதிகளுக்கு பாதந்தாங்க முயற்சிப்பது நாவலர் பெருமானின் பெயருக்கே கேவலமென்றும் மக்களிடையேகருத்துநிலவியது

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஜென்மவிரோதியான நாவலருக்கு எடுக்கப்பட்ட விழாவில், நாவலர் சபை நிர்வாகிகள் தமக்குள் ஆங்கிலத்திலேயே உரையாடிக் கொண்டதை ஒலிபெருக்கியூடாக கேட்ட பொதுமக்கள் விரக்தியடைந்தனர் ஆங்கில மோகத்துடன் ஆங்கில அடிமைகளாக இருப்பதை இனியாவது நாவலர் சபை நிர்வாகிகள் கைவிட வேண்டுமெனவும் நாவலர் சபை நிர்வாகி கத்தை தமிழி நடத்த வேண்டுமென்றும் கருத்து தெரிவித்தனர்

திறப்பு விழாவில் பேசிய ஒரு சிலர், சமய சந்தர்ப்பம் தெரியாமல் இந்துப்பல்கலைக் கழகப் பிரசாரம் மேற்கொண்டபோது பொதுமக்கள் வெறுப்புடன்முகத்தைச் சுழித்துக் கொண்டனர். அக்கருத்துக்கு எவ்வித வரவேற்பும் மக்களிடையே இருக்கவில்லை.

(ந. நி)


## அச்சகத்தோரே! அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்றோம.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு-12

தொலைபேசி: 23411 த. பெ. 1183

## மாயாஜாலம்

காரியம் சுககூடிய பின் பணம் செலுத்துங்கள் நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினால் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்துவைக்கப்படும். மற்ற எல்லாவித மந்திரங்களும் எங்களால் செய்யப்படும். இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

நீலன் சு. தசாமி மந்திரவாதி

நிட்டம்புவ


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வளமிக்க தமிழில் சொற்களுக்கு பஞ்சமில்லை!

## அனைத்தும் தமிழால் முடியும்; ஆகாது என்போர் அறிவற்றவர்கள்!

## எம்மால் முடியாதவற்றை தமிழால் முடியாதெனக் கூறுவது தவறு!

## இயற்கை ஒலிகளோடியைந்து தோன்றிய இன்னிசை சொற்களைக்கொண்டது தமிழ்!

இரண்டு நூற்றுண்டுகளாக ஆங்கிலம் இந்நாட்டில் புழங்கிவருகின்றது. அம்மொழியில் ஆட்சித் துறைச் செய்திகளை எளிதில் எடுத்துக் கூற இயலுமென நாம் நினைத்துக் கொண்டுள்ளோம்! இதற்குக் காரணம் செய்திகளைச் சொல்லும் சில முறைகளை நாம் நன்கு கற்றுக் கொண்டிருப்பதுதான். ஆயினும் நுணுக்கமான செய்திகளை அல்லது விரிவான அறிக்கைகளை எத்தனை பேர்களால் எளிதில் ஆங்கிலத்தில்வரைய இயலுமென எண்ணிப்பார்த்தால் நிலைமை நமக்கு நன்கு விளங்கிவிடும்! ஆங்கிலம் ஒரு சிலருக்கே கைவந்த கருவியாகப் பயன் படுகிறது. ஆனால் தமிழில் எழுதுவது நடைமுறைக்கு வந்துவிட்டால் இத்தகைய ஆற்றலை மிகப்பலர் எய்தக் கூடுமென்பதில் எட்டுணையும் ஐயமிருக்க இயலாது.

2. தமிழன்பர்களைச்சிலர் தமிழ் வெறியர்களென‌க் கூறுவார்கள்! நமக்குப் பிடிக்காதவர்களை நாம் வெறியர்களென ஒதுக்கி விடுதல் மிக எளிது. எளிதில் விளங்கும் ஆங்கிலம் இருக்கையில் தமிழில் எழுதுவதுதேவையில்லையென வாதம் புரிவார்கள். தமிழ் மீது நமக்கு அன்பு இருக்க வேண்டும். தமிழ்ப் பற்றினை மிகுதியாகப் பெற்றுத் திகழவேண்டும். தமிழ் வெறி கூட வேண்டுமெனச் சொல்லத்தோன்றும்: ஆயினும் தமிழன்பை மறந்து தமிழ்ப்பற்றினைவிலக்கி தமிழ் வெறியினை அறவே ஒழித்து, விருப்பு வெறுப்பற்றநிலையில் நின்று தமிழ் மொழியின் தகுதியினை ஈண்டு ஒரு சிறிது ஆராய்வோம்!

3. தமிழர்களாகிய நாம் பெரும் செல்வத்திற்கு உரியவர்கள். பெரும் புதையலுக்கு உரியவர்கள். நாம் நாடோடிகள் அல்லர். இந்நாட்டிற்கு உரியவர்கள். பன்னூறாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணில் வாழ்பவர்கள். பன்னூறாயிரம் சொற்களையுடைய மொழியைப் பேசுபவர்கள். பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க் கணக்கும் நம் நூல்கள். எத்தனையோ பழைய நூல்கள் நீரிலும்நெருப்பிலும் அழிந்து விட்டனவே எனச்சிலர் ஏங்குவார்கள்! செல்லின் செயலை எண்ணி நொந்து கொள்ளுவார்கள்! நீரும் நெருப்பும் செல்லும் உண்டனபோக எஞ்சியுள்ள நூல்களே ஏராளம் நமக்குக் கிடைத்துள்ள நூல்களே கடல் போன்றவை நம்முடைய மொழி தொன்மையான மொழி; வளமான மொழி.

4 இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொல்காப்பியம் எழுந்தது. அந்நூலில் பேசப் பட்டுள்ள செய்திகளனைத்தும் நுட்பமான செய்திகள் எனின் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் மொழி தோன்றிச் சிறிது சிறிதாகச் செப்பம் பெற்றிருக்க வேண்டும்? தமிழ் மொழியின் பிறப்புக் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்ல யாராலும் இயலாதென அறுதியிட்டுச் சொல்லலாம்.

5 இயற்கையாக எழுகின்ற ஒலிகளை உண்டாக்கி வளர்ந்து வந்துள்ள மொழி தமிழ் மொழியாகும். ஒவ்வொரு சொல்லும் இன்னோசையுடைய சொல்லாகும். இனிமைக்கே எடுத்துக் காட்டாய் இலங்குவது தமிழ் மொழி. நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி எழுதப் பெற்றுள்ள கதைகளையும் கட்டுரைகளையும் வாய்விட்டுப் பிறர் படிக்கும்போது, இசையைக் கேட்பதைப் போன்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுவதைக் காணலாம். காலஞ்சென்ற டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை இயற்றியுள்ள 'கால்டுவெல் ஐயர் சரிதம்' இதற்கொரு எடுத்துக் காட்டாகும். பழைய இலக்கியம் அனைத்தும் சுவை பழுத்த செய்யுட்களாலானவை. ஆகவே அவற்றை இங்குக்குறிப்பிடத் தேவையில்லை. எனினும்

'குழலினிது யாழினிது
என்பதம் மக்கள்
மழலைச்சொல்
கேளாதவர்'

என்னும் குறள் மணியை மறக்க இயலுமா? தமிழுக்கு சிறப்பொலியாகிய ழகரம் எத்துணை அழகாக ஈண்டுக் களிநடம் புரிகின்றது. சிறப்பு ழகரத்தைப் பலர் சரிவர உச்சரிப்பதில்லை! அதனைச் சரியாக உச்சரித்து இக்குறட்பாவை நிறுத்தி நிறுத்தி திருப்ப திருப்ப வாய்விட்டுச் சொல்லிப்பார்ப்போம்! இசையைத் தோற்கடிக்கும் இனிமையை இங்கே காண்கிறோம்.

6. வளமிக்க மண்ணில் தோன்றியுள்ள மொழி வளம் மிக்க மொழியாகத் திகழ்வதில் வியப்பேதுமில்லை. பொன் விளையும் நிலத்தில் பொன் போன்ற தமிழ் மொழி பூத்துக் குலுங்கியுள்ளது.

7. ஆங்கிலத்தில் மூன்று பெயர்களை எடுத்துக் கொள்வோம். Gate Keeper, Store Keeper, Time Keeper என்னும் பெயர்களை அடிக்கடி

### கோ. முத்துப்பிள்ளை பீ. ஏ.

கேட்க நேரிடுகின்றது. Keeper என்னும் சொல்லை ''வைத்திருப்பவர்'' என மொழி பெயர்க்கலாம். வாயிலை வைத்திருப்பவர் பண்டம் வைத்திருப்பவர் காலம் வைத்திருப்பவர் என மொழி பெயர்த்து விட்டு 'தமிழில் சரியாக வரவில்லையென எளிதில் சொல்லிவிடலாம்.! 'தமிழில் முடியாது என்று கூட இரைந்து விரைந்த முடிவிற்கு வரலாம்! ஆனால் தமிழ் மொழி வளம் குன்றிய மொழியன்றே.

Gate Keeper - வாயிற்காப்போன்.

Store Keeper - பண்டகக் காப்பாளர்.

Time Keeper - காலங்குறிப்பவர்.

இவையே ஏற்ற மொழி பெயர்ப்புகள். Keeper காப்போராகவும் காப்பாளராகவும் குறிப்பவராகவும் மாறி விட்டார்! ஆங்கிலத்தை விட அருந் தமிழின் அழகைக் கண்டு நாம் மகிழ்கின்றோம்.

8. Government Servant என ஆங்கிலத்தில் கூறுகின்றோம். இதை நாம் ''அரசு வேலைக்காரன்'' என மொழி பெயர்க்கலாமல்லவா? ஆனால் நாம் அவ்வாறு செய்யாமல் ''அரசு ஊழியர் எனச் சொல்கின்றோம். Government officer எனவும் ஆங்கிலத்தில் சொல்கின்றோம். இதனை 'அரசு அலுவலர்' என மொழி பெயர்க்கின்றோம். ஊழியர், அலுவலர், பணியாளர், தொண்டர் எனப் பல சொற்களைத் தமிழ் நமக்குத்தருகின்றது.

'வினையே ஆடவர்க்கு
உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு
ஆடவர் உயிர்'

என்று 'குறுந்தொகை' என்னும் நம் பழைய இலக்கியம் நறுந்தேன் போன்ற செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றது. எனவே அரசுப பணியில் ஈடுபட்டுள்ளோரை ''வினையாளர் என்றும தடையின்றிக் கூறலாம். அரசுக்காக அயராது பாடுபடுவோரை'' உழைக்குனர் என்றும் அழைக்கலாம்.

9. Mistake என்னும் ஆங்கிலச் சொல்லை நாம் அடிக்கடி சொல்ல நேர்கின்றது. இதனைத் ''தவறு'' என்று தமிழில் சொல்கின்றோம். தவறு செய்யாத மனிதனே உலகில் கிடையாது. ஆனாலும் அரசு ஊழியர்கள் தவறு செய்தால் அது பெரிய செய்தியாகப் பேசப்படும். பெரிய இன்னல்களும் ஏற்படக்கூடும்! சிறிய தவறுகளும் உண்டு; பெரிய தவறுகளும் உண்டு. ஆங்கிலத்தில் பல சொற்கள் உள்ளன. Error, Mistake Crime என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பிழை, தவறு, குற்றம் என நாம் சொல்லுவோம். ஏதேனும் பிழை ஏற்பட்டு விட்டால் அதனை Clerical Error என ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்லி பெரியவர்கள் தப்பித்துக் கொள்வார்கள்! இதனைத் தமிழில் 'எழுத்தர் பிழை' எனச் சொல்ல வேண்டும். ஆயினும் நாம் அப்படிச் சொல்லாமல் 'எழுத்துப் பிழை' என்றுதான் சொல்வோம். எழுத்தர் மட்டுந்தான் பிழை செய்வார் என்று சொல்ல முடியாது! பெரிய அலுவலர்களும் பிழை செய்வார்கள்! ஆகவே நாம் யாரையும் குறிப்பிடாமல் 'எழுத்துப் பிழை' என்று யார் மனமும் புண்படாமல் பண்பட்ட முறையிலே சொல்கின்றோம். பெரிய தவற்றினைக் 'குற்றம்' என்று சொல்கின்றோம்.

'Crime' என்று ஆங்கிலத்தில் சொல்லும்போது ஏற்படும் அழுத்தமான ஓசை, தமிழில் 'குற்றம்' என்று சொல்லும் போது ஏற்படவில்லை என்று ஒருவர் சொன்னார். தமிழில் வலிய ஓசையைத்தரும் எழுத்துக்களை வல்லினம் என்கிறோம். ''குற்றம்'' என்னும் சொல்லில் வல்லினம் மிகுந்து நிற்கின்றது. அப்படியிருக்க அதில் வலிமையில்லாது போக முடியுமா? சொல்லியவரின் நா ஒருவேளை மெல்லினமாக இருக்கலாம்! 'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்னும் சொற்களைச் சொல்லிப் பார்ப்பின், வலிமை தெற்றென விளங்கும். சிறிய தவறுகளையும் பெரிய தவறுகளையும் சுட்டிக்காட்ட, தமிழில் நிறைய சொற்கள் உள்ளன. பிழை, பிசகு, தப்பு தவறு, வழு, இழுக்கு, குற்றம் என அடுக்கிக்கொண்டே போகலாம்.

10. சட்டங்களும் விதிகளும் அரசு ஊழியர்களுக்கு வழிகாட்டுவனவாகும். சிலர் சட்டச் செய்திகளையும் விதிகளையும் நன்கு பயின்றிருப்பார்கள். அவற்றை அப்படியே ஒப்புவிப்பார்கள். 'சட்டங்களையும் விதிகளையும் இவர் By heart செய்துள்ளார். எல்லாவற்றையும் Memorise பண்ணியுள்ளார். சட்டங்களும் விதிகளும் இவருடைய விரல்களின் நுனியில் (Fingers' end) நிற்கின்றன' என்றெல்லாம் சொல்லிப் பாராட்டுவார்கள். இவற்றையெல்லாம் நாம் தமிழிலே எவ்வாறு பேசிக்கொள்வோமென்பதை எண்ணிப் பார்ப்போம். 'மனப்பாடம் செய்தல்' என்பதை நாம் நன்கு அறிவோம். 'நெட்டுருச் செய்தல் என்பதையும் மிக நன்றாக அறிவோம். 'வரப்படுத்துதல்' என்பதையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். பாராமல் சொல்வதைப் பாராயணம் எனவும் சொல்லலாம் போலும். ஒவ்வொரு எழுத்தையும் எழுத்துக்களாலாய சொற்களையும் உள்ளத்தின் உள்ளத்தின் உள்ளே வாங்கிக் கொள்கின்றோம். எழுத்துக்களின் அல்லது சொற்களின் உருவத்தை எடுத்து உள்ளேபோட்டு வைக்கின்றோம்! இதைத்தான் 'உருப்போடுதல்' என்கிறோம். இஃது எத்துணை அழகும் பொருளும் பெற்று விளங்குகின்றது. இவையெல்லாவற்றையும் விட 'கரைத்துக் குடித்தல்' என்னும் தொடரை உரைத்து மகிழலாம்! சட்டங்களைக் கரைத்துக் குடித்தவர்கள் நிறைய இருக்கிறார்கள்.

(அடுத்தவாரம் முடியும்)

சிந்தனை மருந்து
குளிகை 4

### சேவை

(அனந்த தேவன்)

நரி ஒன்று காட்டினுள் வசித்து வந்தது. அந்தக் காட்டினருகே ஒரு சிறு கிராமம் இருந்தது. கோழிக் கள்ளனாகிய நரி இரவில் நுழைந்து கோழி திருடுவது வழக்கம்.

நரியின் கொட்டத்தை அடக்குவதற்காக அக் கிராம மக்கள் நாய் வளர்க்கத் தொடங்கினர். நரியைக் காணும் போதெல்லாம் நாய்கள் குரைத்து அபாயக்குரல்கள் எழுப்பத் தொடங்கின. அதனால் பல இடங்களில் நரியார் தலைகாட்ட முடியாது போய் விட்டது.

தன் திருட்டுப் பிழைப்பில் மண்போட்ட நாய் மீது மனிதர் காட்டும் பரிவையும் அதைக் குளிக்க வைத்து உணவு கொடுத்து அன்போடு உபசரிப்பதைக் காணும் போதெல்லாம் நரிக்கு நாய் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் தன்னால் நாயை ஒன்றும் செய்ய முடியாதென்றுணர்ந்த நரி நாயுடன் ஒரு உடன்படிக்கை செய்து தனது திருட்டுத் தொழிலுக்கு நாயை உடந்தையாக்கிக் கொள்ள விரும்பி அதனுடன் ஒரு நாள் பேச்சுக் கொடுத்தது.

''நாயாரே நாயாரே, நாங்கள்இருவரும் இனத்தில் ஒருவரே. கேவலம் என்னைப் பகைத்து நீர் இந்த மனிதப் பிறவிகளுக்கு உதவலாமா'' என்றது நரி மிகவும்பணிவுடன்.

''நாம் நன்றி மறவாதவர்கள்என்பது உமக்குத் தெரியாதா நரியாரே.''

''திருட்டில் பங்கு தரு கிறேனே எனக்கும் நன்றியுள்ளவனாக இரேன்.''

''நானென்ன மனிதப் பிறவியென்று நினைத்தாயா, அனைவரையும் விட்டு விட்டில் கன்னமிட எமக்குத் தெரியாது' போபோ'' என்றது நாய்.

''அப்படியானால் ஒரு உதவி செய்யேன். என்னையும் வளர்க்குமாறு மனிதருக்கு உதவி செய்யேன்'' என்ற நரி, ஆவலுடன் நாயின் பதிலைப் பார்த்து நின்றது.

''அதெப்படி முடியும் நரியாரே, நீர் யாருக்காவது சேவை செய்யும். யாராவது உமக்கும் சேவை செய்வார்கள்'' என்றது நாய்.

அண்ணாவை விமரிசிக்க
நீ யார்?
ஜெயகாந்தனுக்கு பகிரங்கக் கடிதம்!
அடுத்தவார சுதந்திரனில்
இடம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவாணன் பதில்கள்

எஸ். ஆர். கந்தசாமி,
கைதடி.

கே: கலைஞர்திலகம் எம். ஜி. ஆர். புகழுக்காகவா அல்லது ஏழைகளின் நன்மைக்காகவா கொடை வழங்குகிறார்?

ப: ஏழைகளின் நன்மைக்கு வாரி வழங்குகிறார். அதனால் புகழ் அவரை வலிய வந்தடைகிறது!

கே: எம். ஜி. ஆர் கொடை வழங்கிவிட்டு பத்திரிகையில் வெளியிடுகிறார் என்று சிலர் கூறுகிறார்களே உண்மைதானா?

ப: அவர் பத்திரிகையில் வெளியிடுவதற்காக நன்கொடை வழங்குவதில்லை. பத்திரிகைகள் தாம் அதை வெளியிட்டு தங்கள் விற்பனையைப் பெருக்குகின்றன!

ஃ

சண்செல்வன்,
ஏழாலை மேற்கு.

கே: நீங்கள் எத்தனை படங்கள் பார்த்திர்கள்?

ப: வரும் அத்தனை படங்களையும் பார்த்துத்திரவேண்டிய 'கஷ்டத்தை' அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

கே: காதல்நடிகர்ஜெமினி கணேசன் என்றால் காதல் நடிகை யார்?

ப: இன்றைய திரையுலகில் காதல் நடிகைகள் யாரும் கிடையாது. காம நடிகைகள் என்றால் ஏராளமாக இருக்கிறார்கள்!

கே: சிவாஜி, எம். ஜி. ஆர். ஜெமினி மூவரும் சேர்ந்து நடித்த படம் எது?

ப: அப்படியொரு படம் வெளிவந்த பின்பு சொல்கிறேன்!

ஃ

எஸ். மகாதேவா,
உரும்பராய்.

கே: ஸ்ரீதரின் 'சிவந்த மண்' எப்போது வெளியிடப்படும்?

ப: ஆகஸ்ட் 15ல்- இந்திய சுதந்திர தினத்தன்று வெளிவரலாம்!

ஃ

பி. எஸ். மார்க்கண்டு,
களுதாவளை.

கே: இதுவரை கௌரவ நடிகராக நடிக்காத ஒரே நடிகர் எம். ஜி. ஆரா?

ப: ஆம்!

ஃ

த. ஆனந்தராசா,
முள்ளியவளை.

கே: எம். ஜி. ஆரின் விலாசம் என்ன?

ப: எம். ஜி. ஆர். எம். எல். ஏ, எம் ஜி. ஆர். தோட்டம் ராமாவரம், சென்னை.

கே: எம். ஜி. ஆருக்கா, சிவாஜிக்கா சென்னையில் மார்க்கட் உண்டு?

ப: இருவரில் யாரும் சென்னையில் மார்க்கட் நடத்துவதாக நான் கேள்விப்படவில்லை!

ஃ

எம். நவரத்தினம்,
தம்பசெட்டி.

கே: கே. ஆர். விஜயா ரவிச்சந்திரனுடன் ஏன் நடிப்பது இல்லை?

பா: நீங்கள் 'இதய கமலம்' பார்க்கவில்லையென்று நினைக்கிறேன்!

கே: எம். ஜி. ஆருடன் முன்பு நடித்த சரோஜா தேவி இப்போது ஏன் நடிப்பதில்லை?

ப: ஜெயலலிதா அந்த இடத்தைக் கைப்பற்றிவிட்டதால்!

ஃ

நா. தியாகபாலன்,
தெல்லிப்பளை.

கே: சிவாஜி கணேசனின் வெற்றிப் படங்கள் எத்தனை?

ப: அவரைப் பொறுத்தவரை அவர் நடித்த அத்தனை படங்களும் வெற்றிப் படங்கள் தாம்!

ஃ

ம. அன்ரன்,
மிருசுவில்.

கே; ஜெமினி கணேசனுடன் ஜெயலலிதா ஏன் ஜோடி சேரவில்லை?

ப: ஜோடி சேர்த்துவைக்க யாரும் முன்வராததால்!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே; சிவாஜி நடித்து ஈழத்தில் அடுத்துத் திரையிடப்பட இருக்கும் படத்தின் பெயரென்ன?

ப: எங்க ஊர் ராஜா, திருவருட் செல்வர்!

ஃ

சிவானந்தன்,
வல்வெட்டித்துறை.

கே: இலங்கைப்பத்திரிகைகளில் 1968ல் இந்தியாவில் குடியிருந்த கோயில் தான் அதிக பணத்தைக் கொடுத்ததுஎன்று விளம்பரப்படுத்துகிறார்களே— இந்த செய்தி உண்மைதானா?

ப: மன்னியுங்கள். இந்திய வருமானவரி இலாகாவுக்கு எழுதிக் கேட்க வேண்டிய கேள்வி இது!

ஃ

ஏ. ஜே. முகமது முகைடீன்,
திருமலை.

கே: எம். ஜி. ஆர். "ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணியில்" நடித்திருப்பதாக ஒரு வார ஏட்டில் படித்துள்ளேன். அது உண்மையா?

ப: உண்மையல்ல!

ஃ

ஆர். கண்ணன்,
நீர்கொழும்பு.

கே: தேவி என்ற தமிழ்ப் படம் எப்போது வரும்?

ப: அப்படத்தின் தயாரிப்பு வேலைகள் இப்போது நின்று போயிருக்கின்றன.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: தில்லானா மோகனம்பாள் படத்தில் சண்டைக் காட்சிகள் உண்டா?

ப: ஒரேயொரு சண்டைக் காட்சி மட்டும் உண்டு!

எஸ். நாகராஜா,
மட்டக்களப்பு.

கே: சினிமாவில் சேர்ந்து நடிக்க விரும்புகிறேன். அதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: முன்னணி நடிகர்களுக்கு கூஜா தூக்க முதலில் பழகிக்கொள்ளுங்கள்!

ஃ

க. சண்முகராசா,
கொம்மாதுறை.

கே: கணவன், புதிய பூமி, கண்ணன் என் காதலன் ஆகிய படங்கள், தமிழகத்தில் எத்தனை நாட்கள்ஓடின?

ப: புதிய பூமி மட்டும் 100 நாட்கள் ஓடியது!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: எம். ஆர். ராதாவும், மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனும் கடைசி முறையாக சேர்ந்து நடித்த படத்தின் பெயர் என்ன?

ப: பெற்றால்தான் பிள்ளையா?

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 1183
கொழும்பு.

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டேன். இனி உன் இஷ்டந்தான் தேவை. உன் அனுமதிகிடைத்தால் நான் தரும் சிபார்சுக் கடிதத்துடன் நீ கப்பல் ஏறலாம்' கூறிவிட்டு கேள்விக்குறியுடன் பேனுவும் கையுமாக அவனைப் பார்த்தார் டாக்டர்.

கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்தது என்று கூறுவார்கள். நான் எதை மனதில் வைத்துக் கொண்டு உங்களைக் காண வந்தேனே அதை நீங்களே கூறிவிட்டீர்கள். என் பூரண சம்மதத்தைத் தருகிறேன் டாக்டர். என் வாழ்க்கையில் நீங்கள் ஒரு தெய்வம். உண்மையான பக்தர்களுக்கு மனித வடிவில் வந்துதான் உதவும் என்று நான் சமயபாடத்தில் படித்திருக்கிறேன். அப்படி மனித உருவில் வந்த தெய்வந்தான் நீங்களோ என்று எனக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. எது எப்படி இருந்தாலும் நீங்கள் என் உள்ளக் கோயிலில் நிலை பெற்றுவிட்ட தெய்வம்டாக்டர் என்று ஆனந்தக் கண்ணீர் மல்க அவன் மூழ்ந்தாளிட்டு டாக்டரின் கால்களைக் கட்டிக் கொண்ட போது டாக்டரே ஒருகணம் திடுக்கிட்டார்.

அவனை உணர்ச்சியோடு பிடித்து நிறுத்திய அவர் தான் முன்கூட்டியே எழுதி வைத்திருந்த சிபார்சுக் கடிதத்தை அவனிடம் நீட்டி விட்டு ரகு நீ நல்லவன். உன் மனம் அப்பழுக்கற்ற பத்தரைமாற்றுத் தங்கம். அது தான் நீ நினைப்பதுபோல இறைவன் அருள்கிறார். நீ சுகமாகச் சென்று கீர்த்தியுடன் திரும்பி வாப்பா. சிலோனில் இருந்து இன்னும் பல ஊழியர்கள் செல்கிறார்கள் என நினைக்கிறேன். அவர்களில சிலரும் என் சிபார்சின் பேரிற்தான் செல்கிறார்கள். அவர்கள் எல்லோரையும்விட நீ எனக்கு நல்ல பெயர் எடுத்துத்தருவாய் என்ற நம்பிக்கையுண்டு. இந்தா கடிதம். கீர்த்தியோடும் புகழோடும் திரும்பி வா..."

டாக்டர் கூறிமுடித்ததும் அவரிடம் கடிதத்தைப் பெற்றுக் கண்ணில் ஒற்றியபடியே பிரியமனமில்லாமற் பிரிந்து சென்றான் ரகு. எந்தவித சிரமமுமில்லாமல் தன் இலட்சியம் ஒப்பேறிய மகிழ்ச்சியில் அவன் நடந்து சென்றபோதும் வெளியிட முடியாத ஒரு ஊமை வேதனை அவன் உள்ளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. அது உமாவைப் பற்றியதே. ஜெயநாதனுக்கு அவன் கொடுத்த வாக்குறுதி ஒருபுறமிருக்க அவளையிட்டு அவனுக்கிருந்த சொந்தக்கவலை அதிகமாக இருந்தது. தான் புறப்படுமுன் அவளை எப்படியாவது கண்டு அவளது எதிர்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள அவன் மனந்துடித்தது. அவளைக் கண்டு பேசிக்கொள்ளாமல் போவதால் அவனுக்கு நிம்மதியேற்படமாட்டாது என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். ஆகவே புறப்படுவதற்குமுன் உமாவை எப்படியாவது கண்டுபிடிப்பதே அவன் நோக்கமாயிருந்தது.

இரண்டுநாட்கள் கொழும்புப் பட்டணம் முழுவதும் அலைந்தும் அவனால் உமாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தப் பெரிய பட்டணத்தில் உமாவைக் கண்டுபிடிப்பது அத்தனை சுலபமகா இருக்கவில்லை அவனுக்கு. இரண்டு நாட்போதும் எப்படியோ ஓடி மறைந்து அந்திப்பொழுது அவன்முன்னே அபயந்தந்தது. விடிந்தால் அவன் ஈழத்தின் அழகிய கரையைவிட்டே அகன்று விடுவான். ஆனால் இழந்த நிம்மதியை அந்தப் பயணத்தின்மூலம் பெறமுடியுமோ என்பது அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. உமாவை மட்டும் ஒருமுறை ஒரேயொருமுறை கண்டு கதைத்துவிட்டால் அவன் கவலைப்படுவதற்கு இனி இந்த உலகத்தில் எதுவுமே இருக்க முடியாது. நம்பிக்கையிழந்த நிலையில் அவன் இராப்பொழுதைக் கழித்தான். ஆயினும் கடவுள்மேல் இருந்த நம்பிக்கை அவன் உள்ளத்திற்கு சாந்தியளித்தது. இதுகாலவரை எல்லாவற்றையும் நன்மையாக முடித்துவந்த தெய்வம் இனிமேலும் தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கையில் அவன் தூங்கச் சென்றான்.

அன்றையப் பொழுதும் அவன் விருப்பமின்றியே புலர்ந்தது. அவன் அவசர அவசரமாக எழுந்து தன காலைக் கடன்களை முடித்தான். இப்போது அவன் உள்ளத்தில் ஒரே போராட்டம். அன்று புறப்படும் கப்பலில் செல்வதா இல்லையா என்பதே போராட்டத்திற்குரிய பிரச்சினையாக அமைந்தது. உமாவைக் காணமல் அவள் எதிர்காலத்தைப் பற்றி எதுவும் அறிந்து கொள்ளாமல் போவதை அவன் விரும்பவில்லைத்தான். ஆயின் அவள்தானே தன் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொண்டிருந்தால் அவன் என்ன செய்யமுடியும். அவன் வாழ்க்கையில் திரும்பவும் ஒரு புதிய அத்தியாயந் தொடங்கிப் பழைய கதையைப்போலத் தொடர்கதையாகியே விட்டால்...?

அப்படியான ஒரு நிகழ்ச்சிக்கு இனிமேலும் என் வாழ்க்கையில் நான் இடங்கொடுக்கவிரும்பவில்லை. எதுவும் விதிப்பிரகாரம் நடக்கட்டும். நான் இன்று புறப்பட்டேயாகவேண்டும் என்று இட்டித்ததோடு டாக்டர் ராஜன் கொடுத்த இரண்டொரு மேல் நாட்டுடைகளுடனும் அவன் செல்வதற்காயத்தமானான். அதற்குமுன் தங்களுக்கு ஆதரவு காட்டி இருப்பிடம் கொடுத்த இலட்சுமியிடம் விடைபெற்றுக் கொண்டான். இரண்டு நாட்களுக்கு முன் உமாவைத் தேடிச் சென்றபோது புனிதத்திடமும் நடந்தவற்றை யெல்லாங் கூறி தான் போவது பற்றியும பிரஸ்தாபித்திருந்ததால் அந்தக் கவலையும் அவனை விட்டு நீங்கியது.

குறிப்பிட்ட நேரம் வந்ததும் அவன் கடவுளை மனதாரப் பிரார்த்தித்துவிட்டு துறைமுகத்துக்குச் சென்றான். அங்கு டாக்டர்தான் அவனை முதலில்வரவேற்றார். அவர் அவனைக்கட்டித்தழுவி ஆசிர்வதித்து கப்பலுக்கு அழைத்துச் சென்று குறிப்பிட்டவர்களிடம் அவனை அறிமுகப்படுத்தினார். நீர் நிறைந்த கண்களுடன் அவரிடம் இருந்து அவன் பிரியாவிடை பெற்றான். பிறந்த மண்ணை விட்டுப் பிரியும் கவலை பெரிதாக இருந்த போதும் பிறந்த மண்ணில் தனக்கு இடமில்லை என்ற உணர்ச்சி அவனுக்குத் துணிவைக் கொடுத்தது. கப்பலில் இரண்டாந் தளத்தில் நின்று அவன் தன்னைச் சுற்றியிருந்த பரந்த கடலைப் பார்த்தான். தன் மானத்தைப் பறித்த கடல். தன் உயிரைக் காத்த கடல். இப்போ தனக்கு மீண்டும் வாழ்வளிக்க ஆரவாரித்து நிற்பது போன்றதோர் பிரமையில் அவன் தன்னை மறந்து நின்றான்.

கப்பல் புறப்படுவதற்குரிய எச்சரிக்கை கொடுபட்டதும் பிரயாணிகளை வழியனுப்ப வந்தவர்கள் இயந்தியப் படகுகளில் ஏறிக் கரைதிரும்பிக் கொண்டிருந்தனர். கப்பலை விட்டுப் பிரிந்துசென்றபடகுகள் அன்னப்புட்களைபபோல் எழிலாக மிதந்து சென்றன. அவற்றில் ஒன்றினுள்இருந்து யாரோ இருகரங்களையும் அசைத்து அவனுக்குப் பிரியாவிடை கூறுவது போலிருந்தது. அவன் உற்றுப் பார்த்தான் அது சாட்சாத் டாக்டர் ராஜனேதான். 'சென்று வருகிறேன் டாக்டர்' என அவன் பைத்தியக்காரனைப்போல பலமாகக் கத்தினான்.

அவன் குரல் எதிரொலிப்பது போன்றதோர் பிரமை. ஆனால் நிட்சயமாக அது அவன் குரல் இல்லை என்பதைப் புரிய அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அந்தக் குரல் ஒரு பெண்ணுக்குரியதாக இருந்தது. அதுவும் அவனுக்குப் பழக்கமாகிய குரல். அந்த இனிய ஓசை வந்த திசையை நோக்கி அவன் ஓடினான். மேற் தளத்தில் இருந்துதான் வந்தது என்பதை புரிந்து கொண்டு அதிகாரிகள் தடுத்ததையும் மதிக்காமல் மேற்தளத்தை அடைந்தான். அவன் கண்கள் மலர்ந்தன. உடலெல்லாம் ஒரே ஆனந்தப் பூரிப்பு. உமா... உமா .. நீயும என் கூடவா வருகிறாய்... என்று தன்னை மறந்தே கத்திவிட்டான்.

அதிர்ச்சிக்குள்ளாகிய உமா அவனைப்பார்த்து நீங்கள் என்றாள......! 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' என்ற பாடல் அவன் உதடுகளிலிருந்து பிளந்தது பதிலுக்கு.

தனக்கு ஆதரவளித்த டாக்டர் ராஜன்தான் ரகுவுக்கும் தாங்கள் இன்னார் ஒன்பதைப் புரியாமலே ஆதரவு அளித்துள்ளார் என்பதைப் புரிந்து கொண்ட உமா விதியின்விளையாட்டை நினைத்துச் சிரித்தாள். கப்பல் தன்பாட்டுக்குப் புறப்படத் தொடங்கியது.

—முற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கடைசி சில தினங்கள் மட்டும்
## செல்லமஹால்

சிவாஜி, (மூன்று வேடங்களில்) கே. ஆர். விஜயா, பத்மினி, சௌகார் ஜானகி, நாகேஷ் நடித்த

ஏ. பி. நாகராஜனின்

# திருமால் பெருமை

(ஈஸ்ட்மன் கலர்)



## அடுத்த திரைவிருந்து செல்லமஹாலில்

ஜெமினி கணேஷ், நாகேஷ், சுந்தரராஜன், சரோஜாதேவி, வாணிஸ்ரீ
குழந்தை நட்சத்திரங்கள்: பிரபாகர், கௌசல்யா, ராஜி நடித்த

# 'தாமரை நெஞ்சம்'

கதை வசனம், டைரக்ஷன்:— கே. பாலச்சந்தர்



## 3 வது வாரமாக காட்சியளிக்கிறது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா, முத்துராமன், கீதாஞ்சலி கோபாலகிருஷ்ணன்—நடிக்கும்—

ஸ்ரீதரின்

# நெஞ்சிருக்கும்வரை

கிங்ஸ்லி
(கொழும்பு)

எம். ஜி. ஆர். சாவித்திரி, —நடிக்கும்

# 'வேட்டைக்காரன்'

(புதிய கொப்பி)

## 10வது வசூல் கொட்டும் வாரம்!!

செண்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) லிபர்ட்டி (ஹட்டன்)

ஜெய்சங்கர், டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி
முத்துராமன், நாகேஷ், கிருஷ்ணகுமாரி,
ஓ. ஏ. கே. தேவர், நம்பியார், விஜயநிர்மலா
மற்றும் பலர் நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# உயிரா? மானமா?

கதை-வசனம்—டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்,
இசை: 'மெல்லிசை - மன்னன்' எம். எஸ். விஸ்வநாதன்.



ஜெய்சங்கர், விஜயலட்சுமி, நாகேஷ், மாதவி, ஓ.ஏ.கே. தேவர்
பண்டரிபாய், டி. எஸ். முத்தையா, சுந்தரிபாய் நடித்த
''பவித்ரா பிக்ஷர்ஸ்''

# அன்பு வழி


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-ம்வருடம் ஜுலை மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி:23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org